விலை ரூபா: 8.00 Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 19 வெள்ளிக்கிழமை (01.04.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 103

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# மின்சார, பெற்றோலிய துறைகள் தனியார் மயமாக்கப்படமாட்டாது

## அவற்றுக்கான வெளிநாட்டு உதவிகள் பெறப்படும் என்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை, பெற்றோலிய கூட்டுத்தாபனம் என்பன ஒருபோதும் தனியார் மயப்படுத்தப்படமாட்டாது. அவற்றில் பணிபுரியும் ஊழியர்களின் உரிமைகளோ, சலுகைகளோ ஒருபோதும் பறிக்கப்படமாட்டாது. ஆனால் நிறுவனங்களின் நஷ்டங்களை குறைக்கும் நோக்குடன் அவற்றின் நடவடிக்கைகள் மறுசீரமைக்கப்படும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள்களின் விலை அதிகரிக்கும்

(கொழும்பு)

இலங்கையில் பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகளை உயர்த்த அரசு எண்ணியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோல் விலை ரூபா 4.50 இனாலும் டீசல் விலை ரூபா 8.50 இனாலும் மண்ணெண்ணெயின் விலை ரூபா 17.80 இனாலும் உயருமென எதிர்பார்ப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. இராணுவ தளபதி இடமாற்றப்பட்டுள்ளார்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் 23 ஆவது படைப்பிரிவு தலைமையகத்தின் கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் வஜிரவிஜய குணவர்த்தன மின்னேரியாவிலுள்ள இராணுவத் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ள இந்த இடமாற்றத்தினையடுத்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## படுகொலைகளைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் பெரும் பேரணி

(யாழ்ப்பாணம்)

கிழக்கில் நடைபெறும் படுகொலைகளை கண்டித்தும், அரசியல் போராளிகள் தாக்கப்பட்டதைக் கண்டித்து எதிர்வரும் 6 ஆம் திகதி யாழில் மாபெரும் கண்டனப் பேரணியொன்று நடைபெறவுள்ளது.

யாழ் - நல்லூர்க் கோட்டத்திலுள்ள அனைத்துப் பொது அமைப்புக்களும் இணைந்து இப் பேரணிக்கான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளன.

நல்லூர்க் கோயிலின் முன்றலிலிருந்து ஆரம்பமாகும் இப் பேரணி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தைச் சென்றடையும். அங்கு கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட பிரதிநிதியிடம் மகஜர் கையளிக்கப்படும். (ச)

## கொழும்பில் நேற்று பூமியதிர்வு

(கொழும்பு)

கொழும்பிலும் கொழும்மை அண்மித்த பிரதேசங்களிலும் நேற்றுக் காலை இலேசான நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.

கொழும்பு நகரிலும் கொள்ளுப்பிட்டி மற்றும் வத்தளைப் பகுதிகளிலும் இவ் அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

காலை 8.40 மணியளவில் சிறு நில அதிர்வுகள் இடம்பெற்று இருப்பதனை பல்லேகெலவில் இருக்கும் பூமி அதிர்வினைப் பதிவு செய்யும் நிலையத்தில் பதிவாகியிருப்பதாக புவியியல் ஆராய்ச்சி மையத்தின் பேச்சாளர் பேணாட் பிறேம் தெரிவித்தார்.

ஆயினும் அமெரிக்காவின் புவியியல் ஆய்வு மையத்தில் இது தொடர்பாக பதிவு எதுவும் செய்யப்படவில்லை. சுமாத்திரா தீவுகளில் உள்ள புவி வலயத்தில் நேற்றுக் காலை சிறிய புவியதிர்வுகள் ஏற்பட்டதாகவும் ஆகக்கூடியதாக ரிச்டர் மானியில் 6.3 அளவு பதியப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் இலங்கையில் ஏற்பட்ட புவியதிர்வுக்கும் சுமாத்திராவில் ஏற்பட்ட புவியதிர்வுக்கும் தொடர்பிருப்பதாக தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை என அவர் தெரிவித்தார். (ச-04)

## புலிகள்- கண்காணிப்புக் குழு அம்பாறையில் நேற்று சந்திப்பு

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளருக்கும் இடையில் நேற்று மாலை விசேட சந்திப்

நடவடிக்கைகள், விசேட அதிரடிப்படையினரின் அத்துமீறல்கள் என்பவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென இச் சந்திப்பில் கலந்துகொண்ட ரதன் கண்காணிப்புக் குழுவைக் கேட்டுக்கொண்டார்.

## ஐ.தே.க. தலைமைப் பதவியிலிருந்து ரணிலை விலத்துவதற்கு நடவடிக்கை

(நமது நிருபர்)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க உடனடியாக விலகவேண்டும். இவ்

மைப் பதவியில் இருப்பாரேயானால் இனி வரும் தேர்தலில் ஐ.தே.க. வெல்லும் என எதிர்பார்க்கமுடியாது என அவர் தெரிவித்

# அம்பாறையில் நேற்று சந்திப்பு

(அம்பாறை)


தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளருக்கும் இடையில் நேற்று மாலை விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் அம்பாறை மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் ரதன் உள்ளிட்ட போராளிகள் பங்கேற்றனர்.

இராணுவத்தினர நடத்திவரும் சோதனை நடவடிக்கைகள், விசேட அதிரடிப்படையினரின் அத்துமீறல்கள் என்பவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென இச் சந்திப்பில் கலந்துகொண்ட ரதன் கண்காணிப்புக் குழுவைக் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்டப் பொறுப்பாளர் இராணுவத்தினரின் சீண்டலின் மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுமையாக இருப்பதை வரவேற்றார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



பின்லாந்து வெளிவிவகாரத்துறை அமைச்சர் தலைமையிலான குழுவினரை தமிழீழ அரசியல் விவகாரக் குழு நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

# ஐ.தே.க. தலைமைப் பதவியிலிருந்து ரணிலை விலத்துவதற்கு நடவடிக்கை

(நமது நிருபர்)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க உடனடியாக விலகவேண்டும். இல்லாவிடின் அவரை விலத்துவதற்கு கட்சியின் உயர்பீடம் கூடி தீர்மானம் மேற்கொள்ளவேண்டுமென கட்சியின் அநுராதபுரம் மாவட்ட அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் ரணில் விக்கிரமசிங்க இருப்பதனால் 12 தேர்தல்களில் தோல்வி ஏற்பட்டுள்ளது. அவர் தொடர்ந்தும் தலைமைப் பதவியில் இருப்பாரேயானால் இனி வரும் தேர்தலில் ஐ.தே.க. வெல்லும் என எதிர்பார்க்கமுடியாது என அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஐ.தே.க. கட்சியினுள் ஏற்பட்ட உட்பூசல் காரணமாகவே இம் முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.தே.கவில் அங்கம் வகிக்கும் சமாதானத்தை விரும்பாத சக்திகளே அக்கட்சியினுள குழப்பத்தை மேற்கொண்டுள்ளதாகத் கூறப்படுகிறது. (ச-4-8)

# பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று கடமைக்குத் திரும்புவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தனது போராட்டத்தை நேற்று இடைநிறுத்தியுள்ளது.

பல்கலைக்கழக துணைவேந்தர் சர்வதேச மாணவர் பேரவை இணைப்பாளர், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர், பீடங்களின் பிரதிநிதிகள், பீடாதிபதிகள் ஆகியோருக்கிடையில் நேற்று கூட்டமொன்று நடைபெற்றது.

இக் கூட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் 9 ஆம் திகதி தமது கோரிக்கைகள் தொடர்பாக ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு தமது போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளதாகவும் இன்று அனைத்து ஊழியர்களையும் கடமைக்கு திரும்புமாறும் ஊழியர் சங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமது அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாக எதிர்வரும் 9 ஆம் திகதி இரவு தமது செயற்குழு கூடி முடிவெடுக்குமென ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. (ச)

EXPOAIR யாழ் கொழும்பு
தினசரி விமான சேவை
எக்ஸ்போ எயார்
T.P: 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
Your friend in the skies... E-Mail: jaffna @ expoavi.com, reservations @ expoavi. com,
வானத்தில் உங்கள் நண்பன்...

# நல்லதைச் செய்து நற்கதி அடைவோம்

## வெள்ளி நற்சிந்தனை

இப்பரந்த நிலவுலகின் கண்ணே மானிடப்பிறவி எடுத்த நாங்கள் மிகவும் பாக்கியசாலிகள். 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது'



என்றார் ஒளவையார். ஆகவே இந்த மனிதபபிறவியானது மிகவும் மகத்துவம் மிக்க ஒன்று என்பது தெளிந்த உண்மை.

இந்த மானிடப் பிறவியின் அருமையும் பெருமையும் சொல்லில் அடங்காது. எனவே வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனாகிய சிவன் தன்னை வந்து சேரும் பொருட்டே இத்தனையும் படைத்திருக்கின்றான். இந்த உலகில் பிறவி எடுத்த நாங்கள் இறைவனின் வற்றாத கருணைக்குப் பாத்திரமாகி அவன் அருளைப் பெறுவதற்கு நல்லமுயற்சி எடுக்கவேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்? தொண்டு செய்யவேண்டும். இறை தொண்டின மூலம் நாம் இறைவனை அடையலாம்.

ஆண்டவனின் அருளைப் பெற்ற அப்பரடிகள் நமக்கு நல்ல வழி காட்டியாவார். அவர் நமது ஒவ்வோர் உறுப்புக்கும் வேலை கொடுக்கின்றார். "தலையே நீ வணங்காய்!" என்று தொடங்கி திருவங்கமாலை திருப்பதிகமே பாடியிருக்கின்றார். ஆகவே அவர் வாழ்ந்து காட்டிய பாதையிலே நாமும் நமது வாழ்க்கை வண்டியைச் செலுத்துவதே நல்ல நெறியாகும். 'புண்ணியமாம் பாவம போம் போன நாட் செய்தவனது மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள்' ஆகவே புண்ணியமே செய்யத்தக்கது. பாவம் விலக்கப்பட வேண்டியது.

இந்த உலகில், நல்லது எது? தீயது எது? என்று உய்த்துணரக் கூடிய ஒரே பிறவி இம்மனிதப்பிறவி, அதன் மாண்பினை உணர்ந்து நாம் வாழத்தலைப்படுதல் வேண்டும். பயறுவிதைத்தால் பயறுதான் முளைக்கும். இதை உணர்ந்து கொண்டால் உலகில் பிரச்சினையே இருக்காது. ஒவ்வொருவரும் நல்லதையே செய்யத் தொடங்கி விடுவார்கள். சுவரிலே ஒரு பந்தை வீசி எறிந்தால் அது திரும்பி எமக்குத் தான் வரும். நாம் செய்வது நமக்குத்தான். பச்சைக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பார்த்தால் அது பச்சையாகத்தான் இருக்கும். இந்த உண்மையைப் புரிந்து உணர்ந்து நடந்து கொண்டால் நாங்கள் நற்கதி அடையலாம்.

நல்லதையே எண்ணி, நல்லதையே சிந்தித்து, நல்லதையே செய்தோமாயின் பூவுலகில் நமக்கு நல்லதே நடக்கும். மூறை, நன்னெறி நல்வழி. உலகநீதிபோன்ற நூல்களை நாம் படித்தால் மட்டும் போதாது படித்தபடி நடக்கவேண்டும். அது தான் இங்கே பிரதானம்.

இறைவனை அடைவதற்குப் பல வழிகளுண்டு. தொண்டு செய்து அவன கழலனைச் சேர்வதே சிறந்த மார்க்கமாகும். 'நிலைபெறுமா றெண்ணு தியேல் தித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு' என்றபடி நாங்கள் ஒவ்வொருநாளும் ஆலயத்துக்குச் சென்று வழிபாடியற்ற வேண்டும். 'அவனருளாலே அவதன் தாள் வணங்கி' என்பதற்கிணங்க அதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அவனன்றி ஓரணுவும் அசையாது; அவன் ஆட்டுவிக்கின்றான்; நாம் ஆடுகின்றோம்.

பொம்மலாட்டக்காரன் திரை மறைவிலிருந்து கொண்டு பொம்மைகளை ஆட்டுகின்றான். நாங்கள் பார்த்து ரசிக்கின்றோம். பொம்மைக்கும் அவனுக்கும் இடையிலேயுள்ள கயிறுதான் பொம்மைகளை நடமாட வைக்கின்றது. அந்தக் கயிறு அறுந்துவிட்டால் ஆட்டம் நின்றுவிடும். அதேபோல் தான் இறைவனும் நம்மையெல்லாம் படைத்து நடமாடவிட்டிருக்கின்றான். அவன் நினைத்த மாத்திரத்திலே அழைத்துக் கொள்வான். அதற்கிடையில் நாங்கள் நல்லதைச் செய்து நற்கதிக்கு வழி தேடிக் கொள்ளவேண்டும்.

எந்த நேரமும் சிவசிந்தனையோடு இருக்கப் பழகவேண்டும். அவனது நாமத்தை உச்சரிக்க வேண்டும். சதா அவன் புகழ் பேச வேணடும். அவனைப்பற்றியே உரையாடவேண்டும். அவனையே தியானிக்க வேண்டும். இதைவிடச் சுலபமான வழி வேறில்லை. நம்மை நாமே கட்டுப்படுததிக் கொள்ளவேண்டும். நமது முன்னோர்கள் வாழ்ந்து காட்டிய பாதையிலே சென்று நமக்கும் பிறருக்கும் முன்னுதாரணர்களாக வாழ்ந்து காட்டவேண்டும். இனியாவது நல்ல நெறியில் சென்று பிறர் மனதைப் புண்படும் படி பேசாமல் உண்மை பேசி உத்தமனாக வாழ்ந்து இறைதொண்டு செய்து அவனுடைய பாதக்கமலங்களை அடைவதற்கு நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக. □

**கவிமணி இராசையா ஸ்ரீதரன்**

## முத்திரை வெளியீடு

(கொழும்பு)

காலம் சென்ற அமைச்சர் டி.ஏ. ராஜபக்ஷவின் நூறாவது பிறந்த தினத்தையொட்டி 5 ரூபா பெறுமதியான முத்தரை ஒன்று நேற்றுமுன தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இம்முத்திரை வெளியிட்டு வைபவம் அலரி மாளிகையில் பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

இந்த முத்திரையை சஞ்சீவ ஸ்ரீ பத்தாள வடிவமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## துவிச்சக்கர வண்டியில் செல்பவர்களுக்கு!

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கர வண்டியில் செல்பவர்கள் வீதியில் செல்லும்போது சமாந்தரமாக செல்வதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் எனக் கோப்பாய் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு அதிகாரி அறிவித்துள்ளார். (க)

## வைத்திய நிபுணர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

சமீபத்தில் யாழ்.போதனா வைத்தியசாலைக்குப் புதிதாக மூன்று வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இருதய சிகிச்சைக்கு (கார்டியலோஜி) டாக்டர் எஸ்.மனோகரனும் புறறுநோய் வைத்தியத்துக்கு டாக்டர் என்.ஜெயமோகனும் மன நோய் சிகிச்சைக்கு டாக்டர் எஸ்.சிவயோகனும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். (து)

## இராசி பலன்

01.04.2005
பங்குனி 19, வெள்ளிக்கிழமை
சப்தமி முன்னிரவு 6.44 மணிவரை
மூலம் முன்னிரவு 08.55 மணிவரை
இராகுகாலம் 10.41 - 12.11 மணிவரை
சுபநேரம் 6.11 - 7.41 மணிவரை
அமிர்தசித்தம்

| | |
|---|---|
| மேடம் | புதியதிட்டமில், எதிர்பாராத செலவு, பிரயாணம், சரீரப்பிரயாசை. |
| இடபம் | அஜீரணக்கோளாறு, மனக்கவலை, காரியதடங்கல், வேலைச்சுமை. |
| மிதுனம் | தேகநலன், வாகனசுகம், தெய்வதரிசனம், கீர்த்தி. |
| கடகம் | ஆரோக்கியம், தடைப்பட்டகாரியம் கைகூடும், சத்துருஜெயம், மனமகிழ்ச்சி. |
| சிங்கம் | காரியதாமதம், தாழ்ந்த சுபாவம், அஜீரண ரோகம், சொத்துப்பிணக்கு. |
| கன்னி | தனவிரயம், புதிய விடயம், எடுத்தகாரியம் தாமதமாகும், மனச்சோர்வு. |
| துலாம் | நற்கீர்த்தி, உறவினர் வருகை, முயற்சி கைகூடும், தெய்வதரிசனம். |
| விருச்சிகம் | போசன சுகக்குறைவு, கௌரவக்குறைவு, அதிகசெலவு, விவாதம். |
| தனுசு | மாதர் நட்பு, போசனசுகம், வெகுமானம், தெய்வசிந்தை. |
| மகரம் | சோம்பல் நிலை, பிரயாணம், உறவினர் வெறுப்பு, பிறருக்கு உதவுதல். |
| கும்பம் | நண்பர்கள் சந்திப்பு, தெய்வசிந்தை, குடும்ப மகிழ்ச்சி, சயன சுகம். |
| மீனம் | ஆரோக்கிய நிலை, பெரியோரால் மதிக்கப்படல், சுபநிகழ்வு, நல்ல முயற்சி. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

-வளவன்

## ஊடகவியலாளர்களுக்கான கைநூல் வெளியிடப்பட்டுள்ளது

(கொழும்பு)

நெருக்கடி நிலைமை பற்றி அறிவிக்கும்போது சமாதானத்தைக் கட்டி எழுப்பும் வகையில் செய்திகளை வழங்குவதற்கு, ஊடகவியலாளருக்கு உதவும் கைநூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய சமாதான சபை இதனை வெளியிட்டுள்ளது. இந்நூல் வெளியீட்டு வைபவத்தில் உரையாற்றிய அசோசியேட்டட் நியூஸ் பேப்பேர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட்டின் ஆசிரியர் சபைப் பணிப்பாளர் கருணாரட்ன பரணவிதாரண கருத்துத் தெரிவிக்கையில்,

நெருக்கடிகளைத தீர்ப்பதில் ஊடகவியலாளர்களுக்கு குறிப்பிடத்தக்க பொறுப்பு இருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

ஊடகவியலாளர் சுனந்த தேசப் பிரிய உரையாற்றும் போது அண்மைய நெருக்கடி காலத்தில் ஊடகங்கள் அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

ராவய பத்திரிகை ஆசிரியர் விக்ரர் ஜவன், நாட்டில் இடம்பெற்ற சகல நெருக்கடி நிலைமைகளிலும் ஊடகங்கள் பெரும் பங்காற்றியுள்ளன என்று குறிப்பிட்டுள்ளார். (க-7)

## பாதிப்புற்றோருக்கு தொழில் உபகரணங்கள்

(கிளிநொச்சி)

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்து அவர்களை மீண்டும் சொந்தக்காலில் நிற்க வைப்பதற்கான செயற்திட்டங்களை அப்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆரம்பித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்கான தற்காலிக இருப்பிடங்களை அமைத்துக் கொடுத்து, அவர்களைத் தங்கவைத்ததன் பிற்பாடு அவர்களுக்குத் தொழில் வாய்ப்புகள் என்பது இன்றியமையாதது என்ற அடிப்படையில்,

கடந்த 26ஆம் திகதி ஆழிப்பேரலை அனர்த்தத்தின மூன்றாம் மாத நினைவை முன்னிட்டு மாலை 5.00 மணியளவில் தற்காலிக மீள்குடியேற்ற மாதிரிக் கிராமமான கவடாப்பிட்டியில் SMYRNA/FELLOWSHIP நிறுவன அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீன்பிடி உபகரணங்களையும், தையல் இயந்திரங்களையும் வழங்கியதுடன் முதற்கட்டமாக ஒருதொகை மேசைகள், கதிரைகளையும், விளையாட்டு உபகரணங்களையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (க)

## முஸ்லிம் மாணவிகளின் தலைமறைப்புக்குத் தடை

(கொழும்பு)

கொழும்பில் உள்ள பள்ளி ஒன்றில முஸ்லிம் மாணவிகளின் தலைமறைப புக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பெண்கள் பள்ளியிலேயே கடந்த வாரம் முதல் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் மாணவர்களும் சிங்கள மாணவர்களைப் போல்தான் வர வேண்டும் என்று கட்டாய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அப்பள்ளியில் நூற்றுக்கும் மேற பட்ட முஸ்லிம் மாணவர்கள் கல்வி பயின்று வருகன்றனர். கல்வி அமைச்சு உத்தரவின் ஆணைப்படி இஸ்லாமிய மாணவர்கள் மார்க்க முறையிலான உடைகளை அணியத் தடை எதுவும் உத்தியோகபூர்வமாக அமுலிலில்லை.

இருந்தபோதும் கொழும்புப் பள்ளி தடைவிதித்துள்ளமை கடுமையான கோபத்தை இஸ்லாமிய மாணவர்கள மத்தியில் உருவாக்கியுள்ளது.

இது குறித்து அவர்களது பெற்றோரும் முறைப்பாடு செய்ததோடு இந்த உத்தரவை மீள்பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதனிடையே இந்த பிரச்சினை குறித்து தலையிட்டுள்ள மேற்கு மாகாண ஆளுநர் அலவி மவுலானா, மாகாண முதல்வர் ரெஜினால்டைத தொடர்புகொண்டு அப்பள்ளி நிர்வாகத்திற்கு கல்வி அமைச்சின் உத்தரவை மேற்கோள்காட்டி உரிய உத்தரவு பிறப்பிக்குமாறு கூறியுள்ளார்.

இது தொடர்பான ஆய்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றது. இதில மாகாண ஆளுநர், முதல்வர், மாகாண கல்வி அமைச்சர் ஆகியோர் பங்கேற்றனர். (க)

## ஆயுளை நீடிக்க மருந்து கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஆயுளை 30 ஆண்டுகள் நீடிக்கச் செய்யும் மருந்தை ஸ்கொட்லாந்து விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உள்ளார்கள்.

மனிதன் வாழ்நாளை அதிகரிப்பதற்காக விஞ்ஞானிகளும், மருத்துவர்களும், காலாகாலமாக ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். இதுவரை அவர்களுக்கு வெற்றி கிட்டவில்லை.

இப்போது இந்த முயற்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது. ஸ்கொட்லாந்து அபோதீன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆயுளை 30 ஆண்டுகள் நீடிக்க வைக்கும் மருந்தை கண்டுபிடித்துள்ளார்கள்.

இதுபறறி அபோதீன் பல்கலைக் கழக பேராசிரியர் ஜோன்ஸ்பீக்மேன் கூறுகையில் நாள் ஒன்றுக்கு ஒரு மாத்திரை சாப்பிடடால் போதும் அது அவரை ஆரோக்கியமாக வைக்கிறது.

நீண்ட நேரம் உழைப்பதற்கு உதவுகிறது. ஆயுளை 30 ஆண்டுகள் நீடிக்கச் செய்கிறது.

ஜீவன்களிடம் ஏற்படும் இராசயன மாற்றத்தை மாற்றுவதன் மூலம் செல்களுக்கு வயதாவதை குறைக்க முடியும். இரசாயன மாற்றத்தின் வேகத்தை அதிகரிப்பதன் மூலம் வாழ்நாளை நீடிக்க மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அது சோதனை முறையில் ஒரு எலிகளுக்குக் கொடுக்கப்படும். அடுத்த 4 ஆண்டுகளில் எலி அதிக காலம் உயிருடன் இருக்க அந்த மருந்து உதவுகிறதா? என்று கண்காணிக்கப்படும்.

சோதனை முடிந்த பின்னர் இந்த மருந்து விற்பனைக்கு வரும். மனிதர்கள் எந்த வயதில் இந்த மருந்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றியும் விஞ்ஞானிகள் பரிசீலனை செய்து வருகிறார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். (க-9)

# சுமாத்ரா அருகே மீண்டும் பாரிய பூமியதிர்ச்சி இடம்பெறும் அபாயம்

## காலவரையறை குறித்து நிச்சயமற்ற நிலையில் விஞ்ஞானிகள்...

**கடந்தவருடம் டிசம்பர் மாதம் 26ஆம் திகதியில் இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் பேரழிவை ஏற்படுத்திய கடல் கோளுக்குக் காரணமான பூமியதிர்ச்சியின் விளைவாக தோன்றிய மண்ணியல் அமுக்கமே கடந்த திங்கட் கிழமை இரவு இந்தோனேசியாவின் சுமாத்திராத் தீவுக்கு அப்பால் மீண்டும் பூமியதிர்ச்சியை ஏற்படுத்தியதாகவும் அப்பகுதியில் இன்னொரு பாரிய பூமியதிர்ச்சியை எதிர்பார்ப்பதாகவும் பூகம்ப ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.**

**முன்னர் இத்தகைய பூமியதிர்ச்சி அநேகமாக 100வருடங்களுக்கு ஒரு தடவையே இடம் பெற்றது. ஆனால் இப்போது அக்கால இடைவெளி 20 அல்லது 50 வருடங்களாக குறுகலாமென்றும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.**

கடந்த 26இல் ஏற்பட்ட பாரிய பூமியதிர்வின் தொடர்ச்சியாக மற்றொரு கடும் பூகம்பம் இந்தப் பகுதியில் திங்கள் இரவு ஏற்பட்டுள்ளது. 8.7ரிச்டர் அலகு பதிவாகிய பூமியதிர்வு இந்தோனேசியாவின் நியாஸ் தீவுக் கடலில் இடம்பெற்றுள்ளது. இந்தப் பூமியதிர்வால் கடல் படுக்கை மேலெழுந்துள்ளது.

இதனால் பூமித் தகடின் மற்றொரு பகுதி கீழ்நோக்கிச் சென்றுள்ளது. இது அவுஸ்திரேலிய பூமித் தகடு இருககும் பகுதிககு கீழிறங்கியுள்ளதாகத் தோன்றுவதாகவும் சுமாத்திரன் பூமித் தகடை இது கீழிறக்கி இருப்பதாகவும் அவுஸ்திரேலியாவின் மண்ணியல் விஞ்ஞானத துறையைச் சேர்ந்த பூகம்ப ஆய்வாளர் பில்கம்மின்ஸ் தெரிவித்திருக்கிறார்.

டிசம்பர் 26இல் ஏற்பட்ட பூமியதிர்வால் பூமியின் அழுத்தம் அதிகரித்திருந்தது. தற்போது இரண்டாவது தடவை இடம்பெற்றிருக்கும் பூகம்பம் அந்த அழுத்தத்தை மேலும் அதிகரிக்கச செய்திருப்பதாக பூகம்ப ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனா.

நியாஸ் தீவில் திங்கள் இரவு இடம்பெற்ற பூகம்பத்தால் 322 பேர் இறந்துள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டபோதிலும் இறந்தோர் தொகை ஆயிரத்துக்கும் இரண்டாயிரததுக்கும் இடையில் இருக்குமென இந்தோனேசியாவின் உப் ஜனாதிபதி கல்லா தெரிவித்தார்.

கடந்த டிசமபர், 26இல் பூகம்பம் ஏறபட்ட இடத்துக்கு தென் கிழக்கில் 100மைல் தொலைவில் திங்கள் இரவு புவியதிர்வு இடம்பெற்றிருக்கிறது. திங்கள் இரவு இடம்பெற்ற பூமியதிர்விலும் பார்க்க டிசம்பரில் இடம்பெற்ற பூகம்பம் இரண்டு தொடக்கம் 4மடங்குவரை பெரியதென அவுஸ்திரேலிய மண்ணியல் விஞ்ஞானத்துறை தெரிவித்துள்ளது.

இதேவேளை, திங்கள் இரவு இடம்பெற்ற பூகம்பத்தையடுத்து பூமியழுத்தம் அதிகரித்திருப்பதால் மூன்றாவது பூகம்பம் எதிர்பார்க்கப்படுவதாக பில். கம்மின்ஸ் கூறியுள்ளார்.

தென்கிழக்குப் பகுதியில் அடுத்த மண்படைப் பிரிவில் வெடிப்பு ஏற்படுவதை விரைவில் எதிர்பாக்கலாம். ஆனால் எப்போது அது ஏற்படுமென்று நாம் காலவரையறையை கூற முடியாது. 100வருடங்கள் என்றில்லாமல் 20அல்லது 50வருடங்களுக்குள் இது சம்பவிக்கலாம் என்று கூறும் அவா், அடுத்த 3மாதஙகளுக்குள் ஏற்படக்கூடிய சாத்தியத்தையும் நிராகரிக்கவில்லை.

டிசம்பர் 26 இல் ஏற்பட்ட பூகம்பத்தால் உருவான கடல் கோள் 13இந்து சமுத்திர நாடுகளைப் பாதித்ததுடன் 2,88, 376 உயிர்களைக் காவுகொண்டது. திஙகள் இரவு இடம்பெற்ற பூகம்பம் 2.065பாகை வடக்கிலும் 97.010 பாகை கிழக்கிலும் மையம் கொண்டதாக அறிவிககப்பட்டுள்ளது. டிசம்பா 26 பூமியதிர்வு 3.307பாகை வடக்கிலும், 95.947 பாகை கிழக்கிலும் மையம் கொண்டது. இவை கடல்கோளை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களைக் கொண்டிருந்தன.

இதேவேளை இந்து சமுத்திரத்தில் அவுஸ்திரேலியாவின கோக்கஸ் தீவுப் பகுதியில் சிறியளவிலான கடல்கோள் இடம்பெற்றுள்ளமை பதிவாகியுளளது. 4 அங்குல அலையைத தொடர்நது 10 அங்குல அலையேற்பட்டது பதிவாகியுள்ளது. டிசம்பா 26 பூகம்பத்தையடுத்து கோக்கஸ் தீவில் 13அங்குல அலை ஏற்பட்டது. பதிவாகியிருந்தது.

திங்கட்கிழமை இரவு ஏற்பட்ட பூகம்பத்தையடுத்து கடல்கோள் ஏற்படுமென்ற எச்சரிக்கை முதலில் அறிவித்து பின்னர் அதனை ஹவாயின் பசுபிக் கடல்கோள் முன்னெச்சரிக்கை விடுக்கும் கருவிகள் பொருததப்பட்ட முறைமை ஏற்படுத்தப்பட்டிருந்ததாகவும் அது தற்போது பலனளித்திருப்பதாகவும் ஹவாயின் பசுபிக் கடல்கோள் முன்னெச்சரிக்கை நிலையம் தெரிவித்தது.

சா்வதேச முயற்சி பலனளித்ததுடன் சிறப்பாகவும் அது செயற்படுகிறது என்று இந்த நிலையத்தைச் சேர்ந்த டேவ் போ்வில் கூறினாா். ஹவாயிலுள்ள இந்த முனனெச்சரிக்கை நிலையமானது ஆசியாவிலுள்ள வானிலை மன்றம், மண்ணியல் விஞ்ஞான ஆய்வு நிலையங்களுடன் தொடா்புகொண்டு கடல் கோள தொடா்பாக மக்களுக்கு எசசரிக்கை விடுத்ததாக போ்வில கூறுகிறார்.

இதேவேளை, கோக்கஸ் தீவுப் பகுதியில் ஏற்பட்ட சிறியளவிலான கடல்கோள் மொறீசியஸ் தீவுப் பக்கமாக தென்பகுதியை நோக்கிச் சென்றதாக பசுபிக் முன்னெச்சரிக்கை நிலையததைச்சேர்ந்த ரொபோ்ட் சிசரோ தெரிவித்தார். டிசம்பர் 26இல் ஏற்பட்ட பாரிய பூகம்பத்தின் வலுவானது வடக்கு நோக்கிச சென்றதாகவும் அது கடலுக்கடியிலான அழுத்தத்தை குறைத்து விட்டதாகவும் அவா் குறிப்பிட்டாா. தற்போதைய பூகம்ம் தனது பிரதான வலுவை எதிர்த்திசையில் செலுத்தியிருப்பதாகவும் இந்து சமுத்திரத்தின் தீவுகளான மொறீசியஸ், ரொட்ரிக்ஸ் தீவுப் பகுதியை நோக்கி அது நகர்ந்துள்ளதாகவும் அவா் கூறுகிறாா்.

இந்தப் பூமியதிர்வானது கடல்கோளை ஏற்படுத்தியது போலத் தோன்றினாலும் நீர் மட்டம் அந்தப் பகுதியில் உயா்ந்ததாக எந்தத் தகவலும் இல்லை. ஆயினும் பூகம்பத்தின் பருமனானது கடல்கோளை தோற்றுவிக்கும் சாத்தியமுடையதாகக் காணப்படுகிறது. ஆழிப் பூகம்பத்தின் வலுவானது இந்து சமுத்திரத்தின் மத்திய பகுதிக்குப் பரவிச் செல்லாமல் தென் பகுதிக்கு அதாவது மொறசியஸ, ரொட்ரீக்ஸ் தீவுப் பகுதியை நோககிச் சென்றதாக ரொபோ்ட் மேலும் கூறியுள்ளார். (க)

## கொழும்பு கோட்டை ரயில்நிலையம் முன்பாக

# நிவாரணங்களை வழங்கக்கோரி 40 தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகளை கண்டித்தும் சுனாமி நிவாரணத்தை சீராக வழங்கக் கோரியும் சுமார் 40 இறகும் மேற்பட்ட தொழிற்சங்கங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக நேற்று முன்தினம் 12 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

''அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தாதே'' ''கல்வியை தனியார் மயமாக்காதே'' ''சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை ஒழுங்கான முறையில் வழங்க வேண்டும்'' போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்த தொழிற்சங்கங்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளா் ரவி குமுதேஷ் இது குறித்து தகவல் தருகையில்,

தொழிலாளர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் என்ற நம்பிக்கையிலேயே இந்த அரசாங்கத்தை உருவாக்கினோம். ஆனால் அரசாங்கம் ஊழியர்களின் கோரிக்கைகளை புறக்கணித்துவிட்டு அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது.

சுனாமி பேரலை ஏற்பட்டு மூன்று மாதங்கள் கடந்து விட்ட நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் சரியான முறையில் இதுவரை கிடைக்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும கூடாரங்களிலேயே வாடிக் கொண்டிருக்கின்றனர்.

பல்வேறு உயர் அரச அதிகாரிகள் ஊழியர்களின் பிரச்சினைகளை கவனத்தில் கொள்வதில்லை. மேற்படி அதிகாரிகளின் அக்கறையின்மை தொடர்பாக அரசாங்கம் கவனம் கொள்ள வேண்டும்.

தனியார் துறையினருக்கு உடனடி சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டும். இது தொடர்பாக அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

கல்வித்துறையை தனியார் மயப்படுத்தும் முயற்சிகள் கைவிடப்படவேண்டும். அரச வளங்களை பாதுகாக்க வேண்டிய அரசாங்கம் அவற்றை விற்க முயல்வது கண்டிக்கத்தக்கது.

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் முயற்சிகளை கைவிடும்படி அரசாங்கத்தைக் கோருகின்றோம். அவற்றை அரசாங்கம் நிறுத்தாவிடின், முழு அரச துறையுமே ஸ்தம்பிதமடையும் விதத்தில் தொழிற்சங்கப் போராட்டத்தை ஆரம்பிப்போம என்றார்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொணட ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயககார கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கம் கடற்கரையிலிருந்து 100 மீற்றர் தொலைவில் வீடுகள் அமைக்குமாறு கேட்கின்றது. இது அடிப்படையற்ற கோரிக்கையாகும். ஜனாதிபதியின கூற்றுப்படி 200 மீற்றர் தொலைவில் அல்லவா இருப்பிடம் அமைக்க வேண்டும்? என்றார். இதேவேளை ஆர்ப்பாட்டத்தை முடித்துக்கொண்ட தொழிற்சங்கத்தினர் கொழும்பு ஹைட் பார்க் வரை ஊர்வலமாகச் சென்றனர். (க)

# செங்கடலில் இலங்கையர்; சந்தேக நபர் கைதானார்

செங்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த இலங்கையர்களை இலங்கையிலிருந்து சட்ட விரோதமாக அனுப்பியதாகக் கூறப்படும் சந்தேக நபரை குற்றப்புலனாய்வுப்பிரிவினர் கைது செய்துள்ளார்கள்.

இவர் வென்னப்புவ பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிய வருகின்றது.

இச்சம்பவத்தோடு தொடர்புடைய மேலும் நால்வர் குறித்து தகவல்கள் கிடைத்திருப்பதாக குற்றப்புலனாய்வுப்பிரிவின் முக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எகிப்து சென்றுள்ள விசேட பொலிஸ் குழு மேற்கொண்ட விசாரணைகளைத் தொடர்ந்து இத்தகவல்கள் கிடைத்துள்ளன.

137 இலங்கையர்கள் செங்கடல் பகுதியில் தத்தளித்துக் கொண்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் அதிகமானோர் நீர்கொழும்பைச் சேர்ந்தவர்கள். (க)

# நுகர்வோரை பாதுகாக்க பொலிஸார் நடவடிக்கை

தமிழ் சிங்களப் புத்தாண்டு பண்டிகைக்காக பொருட்களை கொள்வனவு செய்வதற்கு கொழும்பிற்கு வருகின்ற நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக பொலிஸார் விசேட திட்டத்தை அமுல்செய்கின்றார்கள்.

இதற்காக 10ஆயிரம் பேர் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று கொழும்பு வலயத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன கேரத் தெரிவித்தார்.

இந்த உத்தியோகத்தர்கள் சிவில் உடையிலும் நடாமாடுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறிப்பாக முடிச்சு மாறிகளிடம இருந்து நுகர்வோரை பாதுகாப்பது பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

நெரிசல் மிக்க தருணங்களில் பணப்பைகள் குறித்து அவதானமாக இருக்குமாறும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தனியார் வாகனங்களில் கொழும்பிற்கு வரும் மக்கள் பொதுபபோக்குவரத்து சேவைகளுகககு பாதிப்பு ஏற்படாத வண்ணம் நடந்துகொள்ள வேணடும் என்றும் அவர் கேட்டுக்கொணடுள்ளார். (க-9)

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

## (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 24



### அத்தியாயம் VIII

நிலையியற் கட்டளை 47 தனியார் உறுப்பினர்களின் சட்டமூலங்களைச் சமர்ப்பித்தலில் பின்பற்ற வேண்டிய நடைமுறையைக் கூறுகின்றது. 48 ஆம் நிலையியற் கட்டளை எவரேனும் ஆளை, சங்கத்தை அல்லது கூட்டு நிறுவனத்தைப் பாதிக்கின்ற அல் லது அதற்கு நன்மையளிக்கின்ற நோக்குடைய சட்டமூலங்கள் தொடர்பில் பின்பற்ற வேண்டிய விசேட நடைமுறையை விளக்குகின்றது.

பொதுவான அக்கறைக்குரிய அல்லது பொது மக்கள் நலன் சார்ந்த விடயமொன்றில் தனியார் உறுப்பினர் சட்டமூலமொன்றைச் சமர்ப்பிக்க விரும்புகின்ற ஓர் உறுப்பினர், சட்டமூலத்தின் குறிக்கோள்கள், முக்கிய அம்சங்கள் ஆகியவற்றைத் தெரிவித்து, அச்சட்ட மூலத்தைப் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதற்கு அனுமதி கோருகின்ற பிரேரணையொன்றின் மூலம் 47 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் விண்ணப்பிக்க வேண்டும். அத்தகைய பிரேரணை மூன்று மொழிகளிலும் உத்தேச சட்டமூலத்தின் பிரதிகளுடன் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அதன் பேரில் செயலாளர் நாயகம் அச்சட்ட மூலம் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்கு வகை செய்வார். அதன் பின்னர் சட்டமூலம் முதலாம் மதிப்பீட்டுக்காக எந்நேரத்திலும் (ஆயின் வர்த்தமானியில் வெளி யிடப்பட்டதிலிருந்து குறைந்த பட்சம் ஒருவாரத்தின் பின்னர்)

ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்படலாம். சட்டமூலம் சமர்ப்பிக்கப்படுவதன் பேரில் வழி மொழியப்பட வேண்டும். அதன் பின்னர் சட்டமூலம் அறிக்கையிடுவதற்காகப் பொருத்தமான அமைச்சரவை அமைச்சருக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டும். அமைச்சர் பாராளுமன்றத்துக்குத் திரும்ப அறிக்கையிடுவதற்கு இந் நிலையியற் கட்டளையின் கீழ் கூடிய பட்சம் ஆறுமாத காலம் அனுமதிக்கப்படுகின்றது.

அரசியலமைப்பின் 121 ஆம் உறுப்புரையின் கீழ் ஒரு தனியார் உறுப்பினரின் சட்டமூலமும் முதலாம் மதிப்பீட்டைத் தொடர்ந்து ஒரு வார காலத்தினுள் ஆட்சேபிக்கப்படலாம். இது கால வரைக்கும் அவ்வாறு ஆட்சேபிக்கப்பட்ட ஒரேயொரு தனியார் உறுப்பினரின் சட்டமூலம் 2001 மே மாதத்தில் "கிறிஸ்தவ சகனயே தொறடுவ" வழிபாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலமாகும். உயர் நீதிமன்றம் அது அரசியலமைப் புக்கு ஒவ்வாதெனத் தீர்மானித்தது. சட்டமூலம் விசேட பெரும்பான்மையுடனும் மக்கள் தீர்ப்பொன்றில் மக்க ளின் அங்கீகாரத்துடனும் நிறைவேற்றப்படவேண்டும் என நீதிமன்றம் தீர்மானித்தது. சட்டமூலம் அரசிய லமைப்புக்கு ஏற்புடையதாவென்பதை உயர் நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய அதே வேளையில் 47 (5) ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் சட்ட மூலம் ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சர் உத்தேச சட்டவாக்கத்தின் தகுதி களை மதிப்பீடு செய்யவேண்டும். அமைச்சரின் அறிக்கை ஆறு மாத காலத்தினுள் சமர்ப்பிக்கப்படாவிட்டால் சட்டமூலத்துக்குப் பொறுப்பான உறுப்பினர் சட்டமூலம் மீதான நடவடிக்கையைத் தொடரும்படி கோரலாம். அதற்கிணங்கப் பொறுப்பான உறுப்பினர் விரும்புகின்ற அத்தகைய நாளுக்குச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு குறிப்பிடப்படலாம். அத்தகைய சட்டமூலங்கள் அதன் பின்னர் வேறெந்த அரசாங்கச் சட்டமூலத் தையும் போன்று தொடரப்படும்.

குறிப்பிட்ட ஓர் ஆளை சங்கத்தை அல்லது கூட்டு நிறுவனத்தைப் பாதிக்கும் அல்லது நன்மை பயக்கும் நோக்குடைய சட்ட மூலங்களின் விடயத்தில் மூன்று மொழிகளிலும் வர்த்தமானியிலும் மூன்று மொழிகள் ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு தேசிய செய்திப்பத்திரிகையிலும் விளம்பரப்படுத்துவதன் மூலம் முன்னறிவித்தல் கொடுக்கப்படவேண்டும். விளம்பரங்கள் சட்டமூலத்தின் குறிக்கோள்களையும் அம்சங்களையும் கூறுவனவாக இருக்கவேண்டும். அத்தகைய விளம்பரம் சட்டமூலத்தைச் சமர்ப்பிப்பதற்கு அனுமதி கோரும் விண்ணப்பம் செய்யப்படுவதற்குக் குறைந்தது. ஒரு மாதத்துக்கு முன்னர் பிரசுரிக்கப்பட வேண்டும். சட்டமூலத்தை அறிமுகப்படுத்துவதற்கான விண்ணப்பத்துடன் பிரேரணையும் சட்டமூலத்தின் பிரதிகளும் தவிர 48 ஆம் நிலை யியற் கட்டளையின் கீழ் பிரசுரிக்கப்பட்ட விளம்பரங்களின் பிரதிகளும் இணைக்கப்படவேண்டும். முதலாம் மதிப் பீட்டின் பின்னர் சட்டமூலம் 47 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் பொருத்தமான அமைச்சருக்கு ஆற்றுப்படுத்தப்படவேண்டுமென்பதுடன், ஏனைய தனியார் உறுப்பினர்களின் சட்டமூலங்களுக்கான அதே நடைமுறையும் பின்பற்றப்படவேண்டும். தனியார் உறுப்பினர்களின் சட்டமூலங்கள் இரண்டாம் மதிப்பீட்டின் பின்னர் வழமையாக ஒரு நிலையியற் குழுவுக்கு அல்லது தெரிகுழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன.

***சட்டமூலங்கள் மீதான நிலையியற் குழுக்கள்***

அரசாங்க சட்டமூலங்களும் அவ்வாறே தனியார் உறுப்பினர்களின் சட்டமூலங்களும் குழுவில் பரிசீலிக்கப்படுவதற்காக நிலையியற் குழுக்களுக்கு ஆற்றுப்படுத்தப்படலாம் அரசாங்கச் சட்டமூலங்கள் வழமையாக முழுப் பாராளுமன்றக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன. (எனினும் பின்வரும் சட்டமூலங்கள் நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன)

1. மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டமூலம் -1996
2. உரித்துக்களைப் பதிவு செய்தல் சட்டமூலம் -1998
3. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமூலம் -2001

சட்டமூலத்தை ஒவ்வொரு வாசகமாகப் பரிசீலனை செய்து பாராளுமன்றத்துக்குத் திரும்ப அறிக்கையிட வேண்டியது ஒரு நிலையியற் குழுவின் கடமையாகும். நிலையியற் குழுக்களை ஆக்குகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை நிலையியற் கட்டளைகளில் குறித்துரைக்கப்படவில்லை. சட்டவாக்க நிலையியற் குழுக்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை தெரிவுக்குழு தீர்மானிக்கவேண்டுமென்று வகுத்துரைக்கின்ற 161 ஆம் நிலையியற் கட்டளையின் பிரகாரம் அத்தகைய எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்றது.

அதற்கிணங்கச் சட்டவாக்க நிலையியற் குழு இருபது நிரந்தர உறுப்பினர்களையும் பதினைந்து ஒத்துத் தேர்ந்தெடுத்த உறுப்பினர்களையும் கொண்டதாக இருக்கவேண்டுமெனத் தெரிவுக்குழு தீர்மானித்தது. ஒத்துத் தேர்ந்தெடுக்கப்படும் பதினைந்து உறுப்பினர்கள் ஒவ்வொரு சட்டமூலத்துக்கும் தனிவேறாக நியமிக்கப்படு கின்றனர். 1990 இல் எடுக்கப்பட்ட ஒரு முடிவுபதினைந்து ஒத்துத்தேர்ந்தெடுத்த உறுப்பினர்களில் 9பேர் அரசாங்க உறுப்பினர்களாகவும் 6 பேர் எதிர்க்கட்சி உறுப்பினர்களாகவும் இருக்கவேண்டுமென்ற விளைவைக் கொண்டிருந்தது. குழு "ஏ" மற்றும் குழு 'பி" என்று இரு நிலையியற் குழுக்கள் உள்ளன. சட்டமூலத்தைப் பிரேரிக்கின்ற உறுப்பினர் (பொறுப்பானவர்) நிலையியற் குழுவின் கூட்டத்தில் சமுகமாயிருக்க உரித்துடையவராவார். ஒரு நிலையியற் குழுவின் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஏழு உறுப்பினர்களாகும்.

ஒரு சட்டமூலத்தின் வாசகங்களை நிலையியற் கட்டளை 47 இன் கீழான அமைச்சரின் அறிக்கையுடன் சேர்த்துப்பரிசீலனை செய்ய வேண்டியது நிலையியற் குழுவின் கடமையாகும். இங்கு கூட (முழுப் பாராளு மன்றக் குழுவை ஒத்தவகையில்) சட்டமூலம் வாசகம் வாசகமென்ற அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டுப் பொருத்தமான விடத்துத் திருத்தங்கள் செய்யப்படுகின்றன. வாசகங்களை நீக்கி ஏனையவற்றைப் பதிலீடு செய்வ தன் மூலம் அல்லது புதிய வாசகங்களைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் அல்லது ஏலவேயுள்ள வாசகங்களை நீக்குவதன் மூலம் திருத்தங்கள் செய்யப்படலாம். மனுதாரர்களும் வேறு அக்கறையுடை தரப்பினரும் நிலையியற் குழு முன் கருத்துரைகள் தெரிவிக்கலாம். 49 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் பாதிக்கப்பட்ட தரப்பினர் அனை வரும் மனுச் செய்வதன் பேரில் நிலையியற் குழு முன் நேரடியாகவோ சட்ட ஆலோசகர் மூலமாகவோ விளங்கப் படலாம். நிலையியற் கட்டளை 49 (3) இன் கீழ் சாட்சியங்களும் பதிவு செய்யப்படவேண்டும். ஒரு வாசகம் நியாய மானதும் உகந்ததுமேயென்று எடுத்துக் காட்டும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டி ருந்தாலன்றி அத்தகைய சட்டமூலத்தில் தனியார் உரிமையையோ நலனையோ பாதிக்கும் எந்தவொரு வாசக மும் அனுமதிக்கப்படாதிருத்தலை நிலையியற் குழு உறுதிப்படுத்த வேண்டும். நிலையியற் குழுவின் கலந்தா லோசனைகளின் பின்னர் அதன் அறிக்கை தவிசாளரால் மூன்றாம் மதிப்பீட்டின் போது பரிசீலிக்கப்படுவதற்காகச் சபையில் சமர்ப்பிக்கப்படலாம். இக் கட்டத்தில் சபை நிலையியற் குழுவால் செய்யப்பட்ட திருத்தங்களைப் பரிசீ லனை செய்து அவசியமாயின் அத்திருத்தங்களை மட்டும் திருத்தலாம். ஏவையேனும் புதிய திருத்தங்களைப் பரிசீலிக்க வேண்டுமாயின் சட்டமூலம் திரும்ப நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படவேண்டும்.சட்டமூலம் இறுதியாக மூன்றாம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படுகின்றது.

(தொ டரும்)

# ரட்ணசிறியை ஜனாதிபதியாக்க சந்திரிகா குமாரதுங்க திட்டம்?

(கொழும்ப)

இலங்கையின் ஜனாதிபதியாக ரட்ணசிறி விக்ரமநாயக்கவை நிறுத்த சந்திரிகா குமாரதுங்க திட்டமிட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் கூறுகின்றன.

ரட்ணசிறியை நாடாளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் ஜனாதிபதியாக்கி விட்டு, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் அவரையே வேட்பாளராக நிறுத்த சந்திரிகா திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ரட்ணசிறியை ஜனாதிபதியாக்கும் போது நாடாளுமன்றத்தின் மூலம் தான் பிரதமர் பதவியேற்கவும் சந்திரிகா திட்டமிட்டுள்ளார். இதனால் தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் சந்திரிகாவுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தகவல் வெளியிட்டுள்ளன.

அண்மையில் சந்திரிகாவுடன் மஹிந்த ராஜபக்ஷ நேரடியாக மோதியதாகவும் அப்போது, 'ஜனாதிபதி பதவி உங்கள் பதவி. அதில் நீங்கள் யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம். ஆனால் பிரதமர் பதவி என்னுடையது. அதற்கு நீங்கள் போட்டியிட்டால் நான் கடுமையாக எதிர்ப்பேன்' என்று நேரடியாகக் கூறியுள்ளார் மஹிந்த ராஜபக்ஷ. இருப்பினும் ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் இதை நிராகரிக்கின்றன.

ஆழிப்பேரலையையொட்டியே சந்திரிகா இந்தத் திட்டமிடலில் இருந்ததாகவும் ஆனால் மஹிந்த ராஜபக்ஷ அதற்கு முட்டுக்கட்டை போட்டதாகவும் ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் கூறுகின்றன. (க)

# புலிகள் மீதான தாக்குதல்; ஆ.குழுவின் அமர்வு ரத்து

(கொழும்பு)

மட்டு. அம்பாறை மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து ஆராய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு கடந்த திங்கட்கிழமை அமர்வை நடத்தவில்லை. சாட்சிகள் சமுகமளிக்காத காரணத்தினால் அமர்வு நடத்தப்படவில்லை எனத் தெரியவருகிறது.

ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க பாதுகாப்புப் படைவீரர்கள் 15 பேர் திங்களன்று ஆணைக்குழு முன்தோன்றினார்கள். அவர்களில் எட்டு படைவீரர்களின் சாட்சியங்கள் மட்டுமே அன்று பதிவு செய்யப்பட்டது.

அதேவேளை ஆணைக்குழு முன்சாட்சியமளிக்க இரு பொது அமைப்புகள் முன்வந்துள்ளன. நான்காம் திகதி முதல் மட்டக்களப்பில் நடைபெறவுள்ள அமர்வின் போது மேற்படி பொது அமைப்புகளின் சாட்சியங்கள் பதிவு செய்யப்படும். (க)

# பொறியியலாளர்களுக்கு விசேட பாராட்டு விழா

(கொழும்பு)

சுனாமி அனர்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட பொறியியலாளர்களுக்கு பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தில் கடந்த புதன்கிழமை விசேட பாராட்டு வைபவம் ஒன்று நடைபெற்றது.

இதற்குத் தலைமை தாங்கிய பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ நீர் வீநியோகம்,தொலைபேசிச் சேவைகள், ரயில் சேவைகள் போன்றவற்றை மீள வழங்க பொறியியலாளர்கள் ஆற்றிய அரிய சேவைகளைப் பாராட்டினார். (7)

# இலங்கைக்கு அமெரிக்கா முழு ஆதரவு அளிக்கும்

(கொழும்பு)

இலங்கைக்கு அமெரிக்க அரசு முழுமையாக ஆதரவு அளிக்கும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி ஜே.லன்ஸ்டெட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஓய்வுக் கிடங்கில் இருந்த கரேஜியஸ் கப்பலை இலங்கை இராணுவ பாவனைகளுக்காக அமெரிக்கா கையளிக்கும் நிகழ்வு கொழும்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பங்கேற்ற இலங்கை கடற்படைத் தளபதி தயா சந்தகிரியிடம் அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி இந்த உறுதிமொழியைத் தெரிவித்தார். (க)

# விவசாயிகளின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்க திட்டம்

(கொழும்பு)


விவசாயிகளின் பிள்ளைகள் எதிர்நோக்கி வரும் கல்விப் பிரச்சினைகளைத் தீக்கும் முகமாக "கொவி தருசக்தி" என்னும் பெயரில் புதிய புலமைப் பரிசில் திட்டமொன்றை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக காணி விவசாய கால்டநடை அபிவிருத்தி அமைச்சர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைகளில் கல்வி கற்று தரம் 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் விவசாயிகளின் பிள்ளைகளுக்கென இத்திட்டம் அமுல்படுத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், விவசாயம் மற்றும் விவசாய காப்புறுதி சபை புதிய திட்டத்தை அமுல்படுத்தவுள்ளது. இதன்படி கடந்த 2004 ஆம் ஆண்டு புலமைப்பரீட்சையில் தோற்றி சித்தி பெற்ற சுமார் 554 விவசாயிகளின் பிள்ளைகளுக்கு முதற்கட்டமாக புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

மேற்படி திட்டத்தின் அடிப்படையில் தேசிய சேமிப்பு வங்கி இவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபா 5 ஆயிரம் வைப்பிலிட்டு புதிய சேமிப்புக கணக்கொன்றையும் ஆரம்பிக்கவுள்ளது. (க-9)

# நேரத்துக்குச் சாப்பிடுங்கள்



நம் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள சில வழிகளைப் பின்பற்ற வேண்டியது அவசியம். பகலில நல்ல உழைப்பும மாலையல் யோகா, தொடர்ந்து நீச்சல் அல்லது வேறு ஏதாவது வேலையும், ஏழு மணியளவில் மாலை உணவும், பத்து மணிக்கு மசாஜ் செய்துவிட்டுத் தூங்கச் செல்வது உடலுக்கு நல்லது.

நம் உடல் 24 மணி நேரமும் ஒவ்வொரு விதமான உடல் உழைப்புக்கு அல்லது பழக்கத்துக்குத் தயாராக உள்ளது. காலை வேளையல் நம் மூளை உன்னிப்பாகக் கவனிக்கும் திறனுடன் இருக்கும். மூளை சுறுசுறுப்பாக இருப்பதால், இந்நேரமே வேலை செய்வதற்கு உகந்தது.

மதியவேளை முடியும் நேரங்களில் நம் உடல் நல்ல வளையும் தன்மையுடன் இருக்கும். எனவே, இந்த நேரமே யோகாவுக்குச் சிறந்தநேரம். யோகா பயிற்சிகள் நம் உடலுக்குப் புத்துணர்ச்சியையும், வலிமையையும், அழகையும் கொடுக்கும். இந்நேரத்தில் உடல் வெப்பம் தானாகவே கூடுகிறது. இது உடற்பயிற்சிக்கான இயற்கையான பொழுது. இந்நேரத்தில்தான் நுரையீரலும் சிறப்பாக வேலை செய்கிறது.

ஏழு மணியளவில் நம் ஜீரண அமைப்பும், கல்லீரலும் சிறந்த நிலையில் இருக்கும். எனவே, உணவு உண்ண உகந்த நேரம் இதுவே. நேரத்தைக்கடைப்பிடிக்க வேண்டியது மிக அவசியம். ஏனெனில், நம் உடலில் அனைத்தும் நேரத்துக்குத் தகுந்தவாறே செயல்படுகின்றன. எனவே, மருந்துகளை எடுத்துக்கொள்வதோடு தகுந்த நேரங்களையும் அறிந்து கொள்ளவேண்டும்.

உதாரணமாக கான்சருக்கு மருத்துவ முறையான கீமோதெரபி, டியூமர் செல் பிரியும்போது தாக்குகிறது. ஆனால், இது தலை முடி மற்றும் வேறு சில காரணி செல்கள் பிரியும்போது அவற்றையும் தாக்குகிறது. எனவே, கீமோதெரபி எடுத்துக்கொள்பவர்களுக்குப் பொரும்பாலும் முடிகள் கொட்டி ஆரோக்கிய மற்ற எண்ணத்தை உருவாக்குகிறது. இதற்குப் பதிலாக, டியூமர் செல்கள் பிரியும் நேரத்தை அறிந்து கீமோதெரபி மருந்துகளைச் செலுத்துவோமேயானால், முடி செல்கள் மற்றும் பிற செல்கள் குறைவாக பாதிப்படையும்.

எனவே உரிய வேளைக்கு உணவு உட்கொள்வதோடு உடற்பயிற்சியையும் கடைப்பிடித்தால் நீண்ட நாட்கள் ஆரோக்கியமான வாழ்வு வாழலாம்.

# தாவர குளோனிங்

மனிதன் மிருகங்களைக் குளோன் செய்வதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பயிர் வகைகளைக் குளோன் செய்ய அரம்பித்துவிட்டான்.

கரும்பு, இஞ்சி, மஞ்சள், வாழை, ரோஜா, உருளை போன்ற பயிர்கள விதை போட்டா வளருகின்றன? உடம்பை வெட்டி நட்டுததானே வருகின்றன. அதுவும் குளோன் முறைதான்.

நல்லவிளைச்சலும், அருமையான சுவையும் தரும் பயிர்களை விதைமூலம் வளர்த்தால் அடுத்த சந்ததியில் குணம் மாறிவிடும் என்று பயந்து முதலில் குளோன் முறையைத் தாவரங்களிடம் தான் மனிதன் பயன்படுத்தினான்.

அறிவியல் வளருவதற்கு முன்பே சாதாரண விவசாயிகள் ஒட்டு மாங்கனி, செவ்வாழை, தேனினும் இனிய கரும்பு முதலானவற்றைக் கண்டுபிடித்துவிட்டார்கள்.

இப்போது திசு வளர்ப்பு என்ற நவீன அறிவியல் தொழில்நுட்ப முறையில் தாவரங்கள் குளோனிங் செய்யப்படுகிறது.

# நகம் காட்டும் நோய்கள்



☞ நகங்கள் இலேசான சிவப்பு நிறத்துடன் பளபளப்பாய்க் காணப்படுவது நல்ல ஆரோக்கியமான உடலைக் குறிக்கிறது.

☞ நகங்களில் வளர்பிறை வடிவம் காணப்படவில்லை எனின் சீரான இரத்த ஓட்டம் இல்லை என்பதை அறிவிக்கின்றது.

☞ நகங்கள் உட்புறமாக வளைந்து பள்ளமாக இருந்தால் இரத்தத்தில் இரும்புச்சத்துக் குறைந்துள்ளது என்பதைக் காட்டும்.

☞ நகத்தில் சொத்தையும், கறுப்பு நிறத்துடனும் இருப்பது போதிய ஊட்டச்சத்து இன்மையை ©யம்புகிறது.

☞ நகம் மிகச் சிவந்து இருப்பது உடலில் அதிக இரத்தம் உள்ளது என்பதைக் காட்டுவதுடன் விரைவில் இரத்தக் கொதிப்பு உண்டாகும் என்பதையும் தெரிவிக்கிறது.

☞ நகம் சதைப்பற்று நீங்கி மேலெழுந்து நிற்பது உடலில் உள்ள சுரப்பிகள் பழுதடைந்துள்ளது என்றும் விரைவில் தோல் நோய்கள் உண்டாகும் என்பதையும் காட்டுகிறது.

☞ கரப்பான, சோரியாசிஸ் முதலிய நேரங்களில் நகக் கண்களில் ஊசியால் குத்தியது போல் பள்ளங்கள் ஏற்படும்.

☞ விரல் நகங்கள் நீல நிறமாக இருப்பின் இருதய நோயின் அறிகுறியாகும்.

☞ குறுக்கு மற்றும் நெடுவரிகள் காணப்பட்டால் உடலில் நுண்கிருமிகளால் நோய் தொற்றியுள்ளது என்பதைக் குறிக்கம்.

☞ நகம் வெளுத்திருப்பின் புரதச்சத்து இன்மையைக் குறிக்கும்.

☞ நகம் மஞ்சள் நிறத்தில் காணப்படின் காமாலை என்பதை அனைவரும் அறிவர். புகைப் பிடிப்போர்க்கு நகம் பழுப்புநிறம் அடையும.


☞ நகக்கனு வீக்கம் எற்படின் இருதய நோய், நுரையீரல் நோய், உணவுப் பாதை நோய் ஆகியவை இருக்கலாம்.

☞ விரல்களை விட நகம் பருமனாக இருப்பின் அஸ்துமா நோய் வந்துள்ளது என்பதைச் சொல்லிவிடும்.

## உப்பு அதிகம் சாப்பிட்டால்

அதிகம் உப்புச் சாப்பிடுபவர்களின் உடலில் அஸ்துமா, அல்சர் ஆகிய நோய்கள் அழையா விருந்தாளியாகிவிடும். நம் உடலுக்கு நாள் ஒன்றுகுத் தேவையான உப்பினளவு 24 கிராம் மட்டுமே. அதற்கு அதிகமானால் பிரச்சினைதான். ஊறுகாய், சிப்ஸ் போன்றவற்றில் அதிக உப்பு இருக்கும். இவற்றை அதிகம் சாப்பிடுவதைக் குறைப்பது நல்லது.

# குறுக்கெழுத்துப் போட்டி இல-53



*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 53**

**'வலம்புரி - சங்குநாதம்'**

**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

முழுப் பெயர் :- ................................................

முகவரி :- ................................................

................................................

................................................

இங்கே வெட்டுக ------------------------------------ ✂

*மேலுள்ள கூப்பனில் வீடைகளை நிரப்ப' எதிர்வரும் 07ஆம் த'கதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

## இடமிருந்து வலம்

(1)குறள் தந்த புலவர். (3)ஜடம் மாதிரி நிற்பவர்களை இப்படிச் சொல்வது வழக்கம். (4)இறைவனிடம் வரம்பெற இதைச் செய்வார்களாம். (6)பொன் கிடைத்தாலும் இது கிடைக்காது என்பார்கள். (7)மூங்கில் - இதனை இப்படியுமழைப்பர். (8)இஸ்லாமிய பெண்களின் கலாசார உடை. (10)பதினாறாவது மேளகர்த்தாவை இப்படிச் சொல்வார்கள் (திரும்பியுள்ளது).

## மேலிருந்து கீழ்

(1)திருமூலரால் செய்தருளப்பட்ட ஒரு நூல். (2)ஒரு சங்கு. (4)பக்குவம் (குழம்பியுள்ளது). (5)ஒரு பொதுவான குழுவை இப்படி அழைப்பார்கள் (கீ.மே). (9)துப்பாக்கித் தோட்டாவை இப்படியும் சொல்வார்கள் (கீ.மே).

## குறுக்கெழுத்துப் போட்டி இல.51 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1.அப்துல்கலாம் 5.க்திர் 8.தசை 9.மாணிக்கம் 12.உழவு 13.மூலிகை

**மேலிருந்து கீழ்**

1.அரக்குமாளிகை 2.துலாம் 3.கத்தி 4.சவுந்தர்யம் 6.கசை 7.கடை 10.மூக்கு 11.உரம்

## பரிசு பெற்றோர் பெயர் விபரம்

**முதற் பரிசு** :- S.திவ்வியன், பருத்தித்துறை வீதி, இருபாலை.

**இரண்டாம் பரிசு** :- செ.நிஷாந்தினி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

**மூன்றாம் பரிசு** :- ப.தெய்வேந்திரன், 07, பேக்கரி ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அத'ஷ்டசாலிகள'ன் பெயர் வ'பரம்

கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. கே.அரசேஸ்வரன், நல்லூர், வே.குமாரசுவாமி, கரவெட்டி. ர.இரகுநாதன், அரியாலை. R.இராஜகாந்தி, கொக்குவில். சி.வன்னியசிங்கம், மந்திகை. என்ஜே.இரத்தினதயா, ஏழாலை. வ.மன்னர் அன்ரனி, குருநகர். ஆ.காயத்ரி, மானிப்பாய். P.செல்வராணி, சங்கானை. க.ஞானோதயன், தெல்லிப்பளை. லோ.அபிராமி, வல்வெட்டி. ஜெ.விமலாதேவி, ஆனைப்பந்தி. சொ.நித்தியா, கொக்குவில். இ.இளங்கோ. உடுவில். க.சிவஸ்கந்தா.

# மனிதாபிமானம்

மதியம் பன்னிரெண்டு மணி. சரியான வெயில். கோடை வெப்பசூட்டில் உச்சந்தலை கொதிக்க மரஞ்செடிகள் வானத்தை அண்ணாந்து பார்த்து ஏககப் பெருமூச்சுவிடும் பஙகுன' மாதம்.

வாசலில் ஆட்டோ வந்து நிறகும் ஓசை கேட்டு மூர்த்தி ஓடி வந்து கதவைத் திறந்தான். ஆட்டோவிலிருந்து கவாஸ்கர் இறங்கி ரைவருக்கு பணம் கொடுத்துக்கொண்டிருந்தான். அவனது பெட்டிகளை மூர்த்தி தூக்கிவர கவாஸ்கர் அவனிடம் பேச்சுக் கொடுத்தான்.

"உங்க பெயரென்ன ஐயா"

"என் பேர் மூர்த்தி"

"எத்தனை வருசமா இங்க வேலை செய்யிறீங்க..."

"நான் ஒரு வருசமா இங்க தானையா வேலை செய்றன்"

"இஞ்ச கண்ணம்மா எண்டு ஒருத்தர் இருந்தாங்க. அவஙக இப்ப இல்லையா...?"

"அது என்னெண்டு எனக்குத் தெரியாது. நான் வரும் போது இஞ்ச அப்படி ஆரும் இல்லை"

அவனது பதிலால் கலக்கமுற்ற கவாஸ்கர் ஷோபாவில் சாய்ந்தான்.

கவாஸ்கருக்கு மனதில் அமைதியில்லை. அப்படியே கண்களை மூடிக்கொண்டான். அவனது மனம் பழைய நினைவுகளைப் புரட்ட ஆரம்பித்தது.

கண்ணம்மா அவனது வீட்டில் சமையல் வேலைசெய்யும் ஒரு வேலைக்காரி. ஆனால் கவாஸ்கரைப் பொறுத்தவரையில் அவள் வேலைக்காரியல்ல. அவனது இதய தெய்வம். அவனது பத்து வயதில் கண்ணம்மாவை முழுசாய் அவனது உறவாகவே எண்ணினான். அவளோடு அவனது பொழுதுகள் அதிகம் கழிந்தன.

தாய் கோமதி அரச வங்கியில் பணிபுரிபவள். தந்தை ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை. கவாஸ்கர் ஒரே ஒரு மகன். அவனைக் கவனிக்கவே அவர்களுக்குப் பொழுதில்லை. தாய் தந்தையரின அரவணைப்பு அவனுக்கு அவ்வளவாகக் கிடைக்கவில்லை. அதனால் பெற்றோரின் அன்புக்காய் அவனது உள்ளம் ஏங்கியது. தாய் தந்தையுடன் வெளியே போகவேண்டும். நிறையக் கதைக்கவேண்டும் என அவனது உள்ளம் துடித்தது. ஆனால் பெற்றோருக்கு அவனை வெளியே அழைத்துச்செல்ல நேரம் கிடைப்பதே இல்லை. மாதர் சங்கம் அது இது என்று கோமதி எஞ்சிய நேரங்களைச் செலவிட்டாள். அதனால் பெற்றபிள்ளையின் தேவை



களைக் கவனிக்க ஒரு வேலைககாரியே தேவைப்பட்டாள்.

சிறுவயதில் கண்ணம்மா மேல் அவன் உயிரையே வைத்திருந்தான். இன்றும வைத்துளளான். அவள் அவனுக்கு ஒரு மனுசயாகத தோன்றவில லை. தெய்வமாகவே தோன்றினாள்.

"இந்தாங்கையா தேனீர்" என மூர்த்தியின் குரல் அவனது சிந்தனையை அறுத்தது. கண்களைத் திறந்து பார்த்தான். அப்போதுதான் அவன் தன் நிலையுணர்ந்தான். தேனீரை வாங்கி மேசைமேல் வைத்துவிட்டு முகம் கழுவ குளியலறைக்குள் நுழைந்தான். முகம் கைகால் அலம்பிக்கொண்டு மணடும் ஷோபாவுக்கு வந்தான. அப்போது தாய் கோமதி கையில் மாலையுடன் வந்தார். விறாந்தையில் கவாஸ்கரைப் பார்த்ததும் அதிர்ச்சி கலந்த சந்தோஷம்.

"என்னடாப்பா, எப்ப வந்தனி? சுகமா இருக்கிறியா?"என மகனிடம் கேள்விகளை அடுக்கினாள்.

அவளது கேள்விகளுக்கு அவனது தலை மட்டுமே அசைந்தது.

"குறை நினைக்காதை. இணடைக்கு ஒரு விழா. அநாதை ஆசிரமம் ஒன்றில் என்னைத் தலைமை தாங்கச்சொல்லி அழைச்சினம். மறுக்கமுடியேலல. அதுதான்..." என கோமதி சமாதானம் சொன்னாள்.

"அம்மா, கண்ணம்மா எங்க..."

ஓ... கண்ணம்மாவோ... ந போய மூண்டு நாலு வருஷத்தால அவளையும அனுப்பிவட்டம" என்றார் கோமதி.

கவாஸ்கரின் இதயத்தை யாரோ ஈட்டியால் குத்துவது போன்று உணர்ந்தான்.

"ஏனம்மா ஏன் வீட்டை விட்டு அனுப்பினீர்கள்..."

"அவளுக்கு கான்சர் வியாதயாம். பிறகேன் அவளை வேலைக்கு வைச்சிருக்கவேணும். அதுதான் கொஞ்சக் காசும் கொடுத்து அனுபபிவட்டம். இப்ப எங்கை எண்டு தெரியாது. நீ வந்த களை ஆறமுன்னம் ஏன் எதை எதையோ கதைக்கிறாய். வா சாப்பிட" எனக் கோமதி பேச்சை மாற்றினாள்.

கவாஸ்கரின் உள்ளம் புளுவாய்த் துடித்தது. 'அந்த நல்ல உள்ளத்துக்கா இறைவன் இப்படியொரு தண்டனையைக் கொடுக்கவேண்டும்' என்று கலங்கினான்.

இரவு முழுவதும் நித்திரையின்றி படுக்கையில் புரண்டான்.

பெற்ற பிள்ளையைக் கவனிக்க நேரமில்லை. அநாதை ஆசிரம விழாவுக்குத் தலைமை தாங்கும் தாய். ஒரு பக்கம் வேடிக்கையாகவும் இன்னொரு பக்கம் வேதனையாகவும் இருந் தது.

பணம் மட்டுமே இங்கு குறிக்கோளாய் ஒவ்வொருவர் வாழ்வையும் நிர்ணயிக்கும் காரணியாக உருவெடுத்து ஒவ் வொருவரையும் ஆட்டிப்படைக்கிறது. மனிதாபிமானம் என்பது மனித மனங்களில் தேடினாலும் கிடைக்கும் என்ற நம்பிக்கை இப்போது இல்லை. பெற்றவர்கள் பிள்ளைகளைத் தங்கள் வேலைகளைக் காரணம் காட்டி ஒதுக்குவதால் அவர்களின் மனநிலை எவ்வளவு தூரம பாதிக்கிறது. அதனால் அவர்கள் மனம் வன்முறைகளை நாடுகிறது. கோபம், பொறாமை போன்ற குணங்கள் வந்து சேரும் என்பதை யார் அறிவர்?

ஆனால் கவாஸ்கர் அப்படி வளரவில்லை. கண்ணம்மாவின் அரவணைப்பிலும் அவளது அன்பிலும் அவன் ஒரு நல்ல மனிதனாகவே வளர்ந்தான்.

பதினைந்து வயதில் அவன் மேல் படிப்புக்காக வெளிநாடு போகவேண்டி ஏறபட்டதால் அவன்து உயிரான கணணம்மாவைப பிரியவேண்டிய நிர்ப்பந்தம் உருவானது.

அவர்கள் இருவரும் பிரியும் போது பட்ட வேதனையிருக்கே அது சொல்லி மாளாது. உயிர் பிரியும் நேரத்தைவிட உறவு பிரியும் நேரம் மிகக் கொடியதல்லவா?

கவாஸ்கர் கடைசியாகக் கண்ணம்மாவைக் கட்டியணைத்து முத்தம் கொடுத்துவிட்டு வேதனையோடு பிரிந்து போய் விட்டான்.

பத்து வருடங்கள் கழித்து ஒரு வாலிபனாய் மீண்டும் தாய் நாடு திரும்பியுள்ளான். யுத்தத் தாண்டவம் ஆடிய பூமி இன்று புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது.

வெளிநாடு சென்றபின்பு அடிக்கடி கண்ணம்மாவைக் கேட்டு கவாஸ்கா கடிதம் எழுதுவான். ரெலிபோனிலும் கேட்பான். அவளைபபற்றி பெரிதாக ஒன்றும் கோமதி சொல்லமாட்டாள்.

இன்று அவளை தாம் வட்டைவிட்டு அனுப்பிவிட்டதாக வெகுசாதாரணமாய்ச் சொல்லி விட்டாள். அவனது உள்ளம் கண்ணம்மா குணமடையவேண்டுமெனப் பிரார்த்தனை செயதது.

பல சிந்தனைகளோடும் அவன் உறங்கிப்போனான். பொழுது விடிந்தது. கவாஸ்கர் எழுந்து சோம்பல் முறித்துக் கொண்டு வெளியே வந்தான். காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளிக்கிட்டு கண்ணம்மாவைப் பார்க்கப் புறப்பட்டான்.

கண்ணம்மா குடியிருந்த பழைய வீட்டில் இப்போது வேறு யாரோ குடியிருக்கிறார்கள். கவாஸ்கர் அங்கு சென்று கண்ணம்மாவைப் பற்றி விசாரித்தான்.

அங்கு அவனுக்கு கிடைதத பதில் பேரிடியாய் இறங்கியது. அந்த வீட்டு மனிதர் கவாஸ்கரை மேலும் கீழும் பார்த்துவிட்டு,

"நீங்கள் யார் தம்பி? கண்ணம்மா உங்களுக்கு உறவா?" என்று கேட்டார்.

"இல்லை ஐயா, அவ என் உயிர். அவவுக்கு இந்த நிலமையைக் கடவுள் ஏன் கொடுத்தான..."என அவனது வாய துக்கம் தாங்காமல் முணு முணுத்தது.

"கண்ணம்மா இறந்து ஒரு வருஷம் ஆச்சு" என அந்த மனிதர் கூறிய வார்த்தைகள் அவனது இதயத்தை சுக்குநூறாய் உடைத்துப் போட்டது.

சமாளித்துக்கொண்டு "நான வாறன் ஐயா" என வீட்டை நோக்கி விரைந்தான்.

நல்லவர்கள் இந்த உலகத்தில் இருக்கமுடிவதில்லை. எதுக்குமே உபயோகப்படாத மனிதர்கள் மட்டும் இன்னும் இப்பூமிக்குப் பாரமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கவாஸ்கரின் கண்களில் இருந்து கண்ணீர்த்துளிகள் சொரிந்தன. இந்த மனிதாபிமானமற்ற மனிதர்கள் நடுவே அந்த நல்ல உள்ளம் வாழக் கூடாது என்றுதான் கடவுள் தன்னிடம் அழைத்துக் கொண்டான் போலும். கண்ணம்மாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் பிரார்த்தனை செய்தான். இப்போது அவனது மனம் அமைதியடைந்தது.

M.சந்திரகலா
யோகபுரம்

## சிறுகதைகள்

# யார் ஊனம்....

வழமைக்கு மாறாக முற்றத்து ரோஜா, பூக்களைச் சுமந்து காற்றிலே ஆடி அசைந்து அழகுக்கு அழகு சேர்த்தது. வாயில் சினிமாப்பாட்டினை முணுமுணுத்தபடி வந்த அருண், ரோஜா மலர் ஒன்றைப் பறித்து,

"இன்றைக்கு உன் இதழ்களிற்கு நாளை என் வனஜாவின் பட்டுக் கன்னத்திற்கு" என ரோஜாவோடு பேசியபடி தன்னை மறந்து காரில் ஏறியது மட்டும்தான் அருணிற்கு நினைவிருந்தது.

நினைவு திரும்பியபோது பல கட்டுக்களோடு வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டிருப்பது புரிந்தது. கைகளை உயர்த்தி எழ முயன்றபோது வலி பொறுக்கமுடியாது தவித்தான். தாதியின் உதவியோடு மெல்ல எழுந்து சாய்ந்திருந்தபோது தான் தாதி கேட்டாள்,

"என்ன சார், காரை ஓட்டவே தெரியாதா? உங்கட கட்டுபபாட்டை மீறி கார் செல்லும்வரை எந்த உலகத்தில் இருந்தீங்க"

அப்போதுதான் அருணின் மனதில் தனது திருமணம் நினைவு வந்தது. தன் வருங்கால மனைவியாகும் வனஜாதானே அவனுக்கு உறவு. அவள் கூடவா அவனைப் பார்க்க வரவில்லை.

'நாளை திருமணம் என எத்தனை கனவுக் கோட்டைகள் கட்டியிருப்பாள். இப்போ எல்லாம மண்ணாகிப் போனதை நினைத்து வருந்திக்கொண்டிருப்பாளே பாவம்" அருண் வனஜாவிற்காக வருந்தினான.



'அருண் நீங்கதான் என் உயிர். உங்களைப் பிரிந்து ஒரு நிமிடம் கூட என்னால் வாழ முடியாது' என்று சொன்னவள் இவ்வளவு நேரம் எப்படி இருப்பாள். அவள் வருவாள என் வனஜா வருவாள்' உள் மனம் ஊமையாக உச்சரித்துக்கொண்டிருப்பதை ஆமோதிப்பது போன்று வனஜாவும் வந்தாள்.

"ஏய் வனஜா, என் மேல் கோபமா? ஏதோ எல்லாம் நடந்துவட்டது அதை கெட்ட கனவாக நினைத்து மற. இன்னும் எண்ணி பத்தே பத்து நாளில் எல்லாம் சரியாகிடும். முச்சக்கர வண்டியில வந்தாவது உன்ர கழுத்துக்கு தாலிமாட்டுவது என் பொறுப்பு. சிரி எங்க சின்னனா சிரி"என வனஜாவோடு தன்னை மறந்து புலம்பிக் கொண்டிருந்தவனைக் கோபமாகவே பார்த்தாள் வனஜா.

"என் வனஜாவிற்கு கோபமா?" செல்லமாகக் கேட்டவனிடம்

"ஓம் கோபமேதான்..." குரல் அதிரக் கூவினாள் வனஜா.

"வ...னஜா நீ... நீயா" நா பதற விழித்தவனை வெறித்தபடி தொடர்ந்தாள்.

A.T.ஜெலீனா
நவாலி.

(...) ஆம் பக்கம் பார்க்க)

# சுமாத்திரா பூகம்பத்தை வைத்து 100 மீற்றர் தடையை அமுல்படுத்த ஜனாதிபதி முயற்சி

## ராஜித .சேனாரட்ன எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொருளாதாரம், சமாதானம் போன்ற விடயங்களில் அரசாங்கம் இருவேறு நிலைப்பாட்டினைக் கொண்டிருப்பதனால் இன்று வெளிநாட்டு நிதி உதவிகள் குறைவடைந்துள்ளன.

பொதுக்கட்டமைப்பு மற்றும் இடைக்கால நிர்வாகசபை என்பவற்றை ஜே.வி.பி எதிர்த்து வருவதனால் சுனாமிக்கான மீள்கட்டுமான நிதி கூட கிடைக்காதுபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரும் எம்.பியுமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

இந்தோனேஷியாவின் சுமாதரா தீவுக்கருகில் இடம்பெற்ற பூகம்பத்தினை வைத்து கடற்கரையில் இருந்து 100 மீற்றர் நிலப்பரப்பில் குடியிருப்புக்கள் அமைக்கப்படுவதனைத் தடுப்பதற்கான தமது முயற்சியினை ஜனாதிபதி மீண்டும் அரங்கேற்றியுள்ளார்.

100 மீற்றர் பகுதிக்குள் குடியிருப்புக்களை அமைக்க தடை விதிக்கும அரசாங்கம் பூகம்பம் ஏற்பட்டதும் கடற்கரையில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கப்பால் மக்களைச் செல்லுமாறு பணித்ததேன்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருதுத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

சுமாத்ரா தீவுக்கருகில் ஏற்பட்ட பூகம்பத்தினால் ஏற்பட்ட சுனாமிப் பீதி செவ்வாய் காலை 12.30 மணியுடன் நீங்கிவிட்டது.

ஆனால் அரசாங்கமோ அதிகாலை 5மணிவரை சுனாமிப் பீதியை நீடித்து சர்க்கஸ் காட்டியுள்ளது.

மக்களை பயமுறுத்திய ஜனாதிபதி இதன்மூலம் 100 மீற்றர் தடையை அமுல்படுத்தப் பார்க்கிறார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின மூன்றிலொரு பங்கினை பாரத் பெற்றோலிய நிறுவனத்திடம் விற்பனை செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கெதிராக தொழிற்சங்கங்கள் கிளர்ந்தெழுந்தமையினால் இம்முயற்சி இருவாரங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

தனியார்மயமாக்கலை மேற்கொள்ளமாட்டோம் என்று வாக்குறுதியளித்த அரசாங்கம் இன்று தனியார்மயமாக்கல் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது.

மின்சாரசபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பன தனியாாமயப்படுத்தப்படும், புலிகளுடன் சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் ஒருவர் என்னிடம் தெரிவித்தார்.

ஜே.வி.பி செயலாளர் ரில்வின் சில்வாவின் ஹோட்டல் தொடர்பான கோவை, விமல் வீரவன்சவின் மனைவியின் வீடு தொடர்பான கோவை, நந்தன குணதிலகவின் கோவை என பன தயாராகிவிட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பங்குகளை விற்கும் விடயத்தில் இரு வாரங்களுக்குள் தீர்வைக் காண்பதற்கு ஜனாதிபதி தவறினால் தொழிற்சங்க நடவடிக்கையினை எடுக்கவேண்டிய நிலை ஏற்படும் என்றார். (க)

# ரணில் அடுத்த வாரம் புதுடில்லி செல்வார்



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 6ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு புதுடில்லி செல்லும் ரணில் விக்கிரமசிங்க இரு தினங்கள் அங்கு தங்கியிருப்பார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங், எரிபொருள் துறை அமைச்சர் மணிசங்கர் ஐயர், பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் அதவானி உட்பட பலரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்தும் சமாதான முயற்சி தொடர்பாகவும் இந்தியத் தலைவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எடுத்துக்கூறவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது ரணில் விக்கிரமசிங்கவுடன் பாராளுமன்ற உறுப்பினர் மலிந்தமொறகொட மற்றும் ஆலோசகர் வல்சன் ஆகியோரும் செல்கின்றனர்?

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் இன்று வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை அநுராதபுரம் மாவட்டத்தில் தங்கியிருந்து கிராமம் கிராமமாக சென்று மக்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். (க)

# அக்கராயனில் தாய் - சேய் போசாக்கு நிலையம் திறப்பு

(கிளிநொச்சி)

'அன்பு' தாய் - சேய் போசாக்கு நிலைய புதிய கட்டடமும் சிறுவர் பூங்காவும் நேற்று முன்தினம் காலை 11.30 மணியளவில் வைபவரீதியாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

நோர்வே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதிப்பங்களிப்புடன் நிறுவப்பட்டுள்ள தாய் - சேய் போசாக்கு நிலையத் திறப்புவிழா நிகழ்வு தேசிய எழுச்சிப் பேரவையைச் சார்ந்த சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

மங்கள விளக்கு ஏற்றப்பட்டதையடுத்து, தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில்,

தாய்-சேய் போசாக்கு நிலைய பிரதான பட்டத்தினை அவுஸ்திரேலிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த திருமதி பரராசசிங்கம் சிராணி நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

'அன்பு' தாய் - சேய் போசாக்கு நிலையத்தின் முன்றலில் யுனிசெவ் நிறுவன நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவினை அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் வண பிதாக்களான ...

...குத் தீர்வுகாணும் பொருட்டு போசாக்கு மையங்கள் அமைக்குமாறும் எமக்குப் பணிப்புரை வழங்கினார்.

இன்று இதுபோன்ற போசாக்கு மையங்கள், பூங்காக்கள் என்பன நிறுவப்பட்டு, ஒரு ஆரோக்கியமான எதிர்காலச் சமுதாயத்தை எங்களால் உருவாக்கமுடியும் என்ற நம்பிக்கை நம் எல்லோர் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வறுமைக்கோட்டின கீழ் வாழும் பெண்கள் ஒன்பது பேருக்கு சுயகைத்தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் பொருட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் ஊக்குவிப்புக் கடனுதவிகளும் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## சர்வதேச நிதியுதவி கிடைக்கவில்லை

# ஜனாதிபதியின் கருத்தை மறுக்கிறது துருக்கி அரசு

(கொழும்பு)

ஆழிப்பேரலைக்காக சர்வதேச நிதி உதவி தமக்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளதை துருக்கி அரசு நிராகரித்துள்ளது.

துருக்கியின் ரெட் கிரசெண்ட் அமைப்பினா இதுகுறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹகீமிடம் விளக்கம் அளித்துள்ளனர்.

ஆழிப்பேரலை காலத்திலிருந்து இதுவரை 1.6மில்லியன் அமெரிக்க டொலரை ஜனாதிபதியின் வங்கிக் கணக்கிற்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் அந்த அமைப்பினர் கூறியுள்ளனர்.

அந்த அமைப்பின் கொழும்புப் பிராந்திய ஹன்காரே ஹக்கீமிடம் மேலும கூறுகையில்,

கூடுதலாக 1.2மில்லியன் அமெரிகக டொலர் வழங்கப்படவுளளதாகவும், மாத்தறை மற்றும் அம்பாறையில் மொத்தம் 700 குடியிருப்புக்களைக் கட்டுவதற்காக தனி நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மாத்தறை மற்றும் அம்பாறையில் கட்டப்பட உள்ள வீடுகள் ஒவ்வொன்றும் 8 இலட்சம் ரூபா மதிப்புள்ளவை என்றும் ஹன் கூறினார்.

இதுகுறித்து இலங்கை அரசுக்கும் துருக்கி அரசுக்கும் இடையே ஏற்கனவே கடித ஒப்பந்தம் செய்யப்பட்டுளளதாகவும் இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பநதத்தில் கையெழுத்திடுவதற்காக டில்லியில் உள்ள துருக்கித் தூதுவர் விரைவில் இலங்கை வரவுள்ளதாகவும் ஹன்காரே கூறினார்.

மாத்தறை, அம்பாறை வீடுகள் கட்டமைப்புப் பணிகள் மேமாதத்தில் தொடங்கும் என்றும் அவர் ஹக்கீமிடம் தெரிவித்தார். (க)

# வெளிநாடுகளில் பணிபுரிவோரின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர்கள் பெறுகின்ற சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்காக உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களின் துணையுடன் விசேட திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி செய்து வருகின்றது.

அத்துடன் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த தொழில் முகவர் ...

... விசேட திட்டமும் அடுத்த மாதம் ஆரம்பமாகும்.

வீட்டுப்பணிப்பெண்ணாக வேலை செய்யும் இலங்கையர் ஒருவருக்கு அகக்குறைந்தது 15 ஆயிரம் ரூபா சம்பளமாக வழங்கப்படவேண்டும் என தொழில் அமைச்சர் அதாவுட செனவிரத்தின சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இந்த நிபந்தனையை வலியுறுத்தும் நோக்கில் இலங்கையில் இருக்கும் வேலைவாய்ப்பு முகவர்களுக்கு விசேட கருத்தரங்கு ...

டொலரை ஜனாதிபதியின் வங்கிக் கணக்கிற்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் அந்த அமைப்பினர் கூறியுள்ளனர்.

அந்த அமைப்பின் கொழும்புப் பிராந்திய ஹன்காரே ஹக்கீமிடம் மேலும கூறுகையில்,

கூடுதலாக 1.2மில்லியன் அமெரிகக டொலர் வழங்கப்படவுள்ளதாகவும், மாத்தறை மற்றும் அம்பாறையில் துணர்வு ஒப்பநதத்தில் கையெழுத்திடுவதற்காக டில்லியில் உள்ள துருக்கித் தூதுவர் விரைவில் இலங்கை வரவுள்ளதாகவும் ஹன்காரே கூறினார்.

மாத்தறை, அம்பாறை வீடுகள் கட்டமைப்புப் பணிகள் மேமாதத்தில் தொடங்கும் என்றும் அவர் ஹக்கீமிடம் தெரிவித்தார். (க)

# விசாரணைகள் ஆரம்பம்

(யாழப்பாணம)

1994 ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு காணாமல்போனவர்கள் தொடர்பிலான ஆட்கொணர்வு மனு விசாரணைகள் நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் ஆரம்பமாகின.

யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட போதும் ஆரம்பகட்ட விசாரணைகளுக்காக அவற்றை நீதிபதி கே.பி. வரதராஜா மாவட்ட நீதிமன்றத்துக்கு மாற்றினார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான விசாரணைகளுக்காக கிருஷாந்தி குமாரசாமி கொலைவழக்கின் மரண தண்டனைக் கைதியான சோமரத்ன ராஜபக்ஷ உட்பட்டவர்கள் ஆஜர் செய்யப்பட்டனர்.

இதனையடுத்து ராஜபக்ஷவை யாழ்.நீதிமன்றத்தில் தடுத்துவைக்குமாறு உத்தரவிட்ட மாவட்ட நீதிபதி சிறிநிதி நந்தசேகரன்,

அடுத்துவரும மூன்று நாட்களில் சாட்சியங்கள் தொடர்ந்து பெறப்பட்டு ஆரம்பகட்ட விசாரணைகள் நிறைவுபெறும் எனத் தெரிவித்தார். (க-4)


## விற்பனைக்கு

சகலவிதமான சொனி, பனசொனிக் ரொசிபா கலர் T.Vகளையும், CD, VCD, DVDகளையும், ரேடியோ கசற் றெக்கோடர்களையும், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற்கள், சிற்றிசன், சீகோ கைமணிக்கூடுகளையும், சுவா மணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங்காரப்பொருட்களையும் ஒரே இடத்தில் நிதான விலையில் பெற்றுக்கொள்ள

**நியூ சிற்றி ரேடர்ஸ்**

குளத்துக்கு முன்பாக , 135, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

T.P: 222 3226


திறந்துவைத்தார்.

'அன்பு' தாய் - சேய் போசாக்கு நிலையத்தின் முன்றலில் யுனிசெவ் நிறுவன நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவினை அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் வண பிதாக்களான ஜெயபாலன் அடிகளார், சௌந்தரநாயகம் அடிகளாா, திருமதி சிராணி பரராசசிங்கம், போராளிகள் குடுமப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத் துணைப்பொறுப்பாளர் றீகன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத் துணைப் பொறுப்பாளர் றீகன் கருத்துரை வழங்குகையில்,

2001 ஆம் ஆண்டில் நிலவிய போர்ச்சூழல் காரணமாகவும், பொருளாதாரத் தடைகள் காரணமாகவும் பாதிக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகளுக்காக இந்நிலையம் அமைக்கப்பட்டதென்றும், 1999 காலப் பகுதியில் இராணுவ நடவடிக்கையால் பாதிப்புற்ற 87 சிறுவர், சிறுமியரை வளர்க்கும் பாரிய பொறுப போடு புதுக்குடியிருப்பில் முதலாவது தாய் -சேய் போசாக்கு நிலையத்தையும், பின்னர் ஆரோக்கியபுரத்திலுமாக அதாவது இன்று புதுப் பொலிப்வுடன் திறந்துவைக்கப்படுகின்ற இந்த தாய்-சேய் போசாக்கு நிலையத்தையும் அன்று அமைத்தோம

போசாக்கற்ற நிலையில் காணப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் பற்றியும், சிறார்கள் பற்றியும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனூடாக தேசியத் தலைவருக்கு தெரியப்படுத்தப்பட்டதையடுத்து அவர் எமக்கு 25 இலட்சம் ரூபா நிதியை வழங்கி, எம்மத்தியில போசாக்கற்ற தாய்மார்கள், குழந்தைகள் இருக்கக்கூடாது என்றும் அவறுக்

கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்காக உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களின் துணையுடன் விசேட திட்டத்தை அமுல் படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி செய்து வருகின்றது.

அத்துடன் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த தொழில் முகவர்கள, வளைகுடா அரச தலைவர்கள், வேலை கொள்வோர் ஆகியோர் மத்தியில் விழிப்புணர்வை ஊட்டும்

அகக்குறைந்தது 15 ஆயிரம் ரூபா சம்பளமாக வழங்கப்படவேண்டும் என தொழில் அமைச்சர் அதாவுட செனவிரத்தின சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இந்த நிபந்தனையை வலியுறுத்தும் நோக்கில் இலங்கையில் இருக்கும் வேலைவாய்ப்பு முகவர்களுக்கு விசேட கருத்தரங்கு நடத்தவும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் திட்டமிட்டிருக்கின்றது. (க-9)

## யார்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

"திருமணம் நின்றுவிட்டதே என்று மட்டும் வருந்தாதேங்க. குறித்த நாள் குறித்தநேரத்தில் என் திருமணம் நடக்கும். என் கழுத்தில் தாலி ஏறும" வெற்றிப் புன்னகை வீச அருணையே பார்த்தவளை,

"அப்படியா...!" என்ற குதூகலமான குரல் தடுக்க,

"ஆமாம், திருமணம் நடக்கும என்பது உண்மை. ஆனால் உங்களோட அல்ல. என் மாமா மகன் தீபனோடுதான்"வனஜாவின் வார்த்தையில் சிக்குண்ட அருணிற்கு நம்பவே முடியவில்லை. பல வேல்கள் பாய்ச்சப்பட்ட உணர்வில் குற்றுயிராகக் கிடந்தான்.

"வனஜா, நீ என்னை நிஜமாகவே காதலிக்கவில்லையா...?"

"அன்று உங்களைக் காதலித்தது என்னவோ உண்மைதான். அனறு உங்களிடம் கார் இருந்தது. இன்று உங்களுக்குக் கால்கூட இல்லையே இது யார் குற்றம்...?" என்று கூறியவள் நிறுத்தி அருணை பார்வையால் வெட்டியவள் அவன் எதுவுமே கூறாது இருக்க,

"என்ன செய்வது கவலையாகத் தான் இருக்கும். அதற்காக தாடி மட்டும் வைச்சிடாதே. அது உம்மட மூஞ்சிக்கு அசிங்கம்" எனக் கிண்டல் செய்துவிட்டு மாயமானாள்.

நாட்கள் நகர்ந்தன. அருணின் கால்களும் தேறி நல்ல நிலையில் வந்தன. அவன் மனம் மட்டும் தேறவேயில்லை. 'என் ஊனத்தைச் சுட்டிக் காட்டினாளே. எனக்குக் கால் இல்லை என்பதற்காக இன்னொருத்தனை மணக்க முற்பட்டாளே! உண்மையல் யார் ஊனம்? நானா அவளா? எனக்கு கால் மட்டும்தான் ஊனம். அவள் மனசே ஊனம். மனசால் ஊனப்பட்டவளோடு வாழ்வதைவிட கால் கை ஊனப்பட்டவளானாலும் மனசாட்சியோடு வாழ்வது மேல்'.

விழிப்போடு அவன் உள்ளம் சிந்திக்க ஊன்றுகோலின் உதவியால் கால்கள் போன திக்கில் தன் வெளிச்சமான எதிர்காலத்தை நோக்கித் தொடர்ந்தது அவன் பயணம்!

*அனைத்தும் கற்பனையே*

# மோசமான வானிலை காரணமாக நியாஸ் தீவில் மீட்புப் பணியில் சிக்கல்

இந்தோனேஷியாவில் பூகம்பத்தால் நாசமான நியாஸ் தீவில், மழை மற்றும் மோசமான வானிலை காரணமாக மீட்புப்பணியில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.


இந்தோனேஷியா, சுமாத்ரா தீவில் கடந்த திங்கட்கிழமை இரவு தாக்கிய 8.7 ரிக்டர் அளவிலான பயங்கரப் பூகம்பம், நியாஸ தீவில் பெரும் சேதத்தை ஏறபடுததியிருக்கிறது.

வீடுகள் இடிந்து 2ஆயிரம் பேர் வரை பலியாயினர். மீட்புப பணிகள் தொடக்கப்பட்டுள்ளன. ஆனால், மழை மற்றும் மோசமான வானிலை காரணமாக மீட்புப் பணியில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டு உதவிகளை இந்தோனேஷியா அரசு எதிர்பார்த்துளளது. அவுஸ்திரேலியா உட்பட சில வெளிநாடுகள், நியாஸ தீவுக்கு நிவாரணப் பொருட்களை அனுப்பியுள்ளன.

மீட்புப் பணியில் ஈடுபட வெளிநாட்டு இராணுவ வீரர்களும் வருகின்றனர்.

நியாஸ் தீவின் தலைநகரான, குனங் சிதோலிக்கு அருகேயுள்ள மிகப்பெரிய கால்பந்து மைதானததில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். காயமடைந்த பலர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. விமானங்களும், ஹெலிகொப்டர்களும் தரையிறங்குவதில சிக்கல் இருப்பதால் காயமடைந்தவர்களை மருத்துவமனைகளுக்கு எடுத்துச்செல்லமுடியவில லை. பர்திக்கப்படட மக்களுக்கு உணவு கிடைக்கவில்லை. இதனால் நியாஸ் தீவில் உள்ள அரசுக் கிடங்கில் இருந்த அரிசியை மக்கள் சூறையாடி எடுத்துச்சென்றனர். (து)



ஆப்கான் சென்ற அமெரிக்க அதிபர் புஷ்ஷின் மனைவி லாரா புஷ் அந்நாட்டு அதிபர் ஹமித் கர்சாயைச் சந்தித்தார்.

# ஆப்கானில் மீண்டும் கார் குண்டு வெடிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் கார்க்குண்டு வெடித்ததில் ஒருவர் பலியானார். மற்றொருவர் காயமடைந்தார்.

ஆப்கானிஸ்தானில் உள்ளது ஜலாலாபாத் நகரம். இங்கு முக்கிய அரசு அலுவலகம் எதிரே நேற்று முன்தினம் காரில் வைக்கபபட்டிருந்த குண்டு வெடித்தது.

கார் டிரைவர் சம்பவ இடத்திலேயே பலியானார். மேலும், ஒருவர் காயமடைந்தார். அமெரிக்க அதிபர் புஷ்ஷின் மனைவி லாரா புஷ் தலைநகர் காபூலில் சுற்றுப் பயணம் செய்ய உள்ள சமயத்தில் இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (து)

# மனித உடலியல் கண்காட்சி



மெக்சிக்கோ நகரில் மனித வர்க்க சாஸ்திரம் தொடர்பாக சமீபத்தில் கண்காட்சியொன்று நடந்தது.

இந்தக் கண்காட்சியில் எகிப்தில் பிரபலமான மம்மி பிரமிடுகள் போன்ற சிலைகளும் வைக்கப்பட்டு இருந்தன.

இந்தச் சிலைகளின் மீது எகிப்தியர்கள் வணங்கும் சூரிய தெய்வத்தின் ஒளிக்கதிர்கள் படுவது போல் இந்தச் சிலைகள் வடிவமைக்கப்பட்டு இருந்தன.

இதுதவிர, பெர்லின், மூன்ச் ஆகிய பகுதிகளில் இருந்தும் 400 ஆண்டுகள் பழைமை வாய்ந்த மனித உருவிலான சிலைகளும் இக் கண்காட்சியில் இடம்பெற்று இருந்தன. (து)

# இராஜினாமா செய்யமாட்டேன் கொபி அனான் அறிவிப்பு

(நியூயோர்க்)

ஐ.நா.பொதுச்செயலர் பதவியிலிருந்து விலகமாட்டேன் என்று அதன் பொதுச் செயலர் கொபி அனான் தெரிவித்தார்.

ஈராக்கின் எண்ணெயை விற்று உணவுப் பொருள்களை வாங்கும திட்டம் தொடர்பான ஊழல் புகார் குறித்த இடைக்கால விசாரணை அறிக்கை கடந்த செவ்வாய்க் கிழமை வெளியிட்டு நிருபர்களிடம் பேசுகையில் அனான் இவவாறு கூறினார்.

பொதுச்செயலர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யும் பேச்சுக்கு இடமேயில்லை. ஐ.நா அமைப்பில் சீர்திருத்தம் கொண்டு வருவதற்கான திட்டத்தை முழு முனைப்புடன் செயல்படுத்துவேன். எண்ணெயை விற்று உணவுப் பொருள் வாங்கும் திட்டத்தில் எனக்கு எவ்வித தொடர்புமில்லை. இடைக்கால விசாரணை அறிக்கை என்னை நிரபராதி என்று அறிவித்துள்ளது. இந்த விசாரணைக்குழு யார் தலையீடுமின்றி சுயேச்சையாக விசாரணை நடத்தியது.

என்னை நிரபராதி என்று அறிவித்தது நிம்மதி தருகிறது. அமெரிக்க பெடரல் வங்கி முன்னாள் தலைவர் பால் வாக்கர் தலைமையிலான விசாரணைக் குழுவுக்கு எனது மகன் கோஜோ ஒத்துழைப்புத் தரவேண்டும். கோஜோ ஒத்துழைப்புத் தரவில்லை என்று விசாரணை அறிக்கை தெரிவிக்கிறது. இது எனக்கு மன வேதனை தருகிறது. விசாரணைக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும என எனது மகனையும் நான் கேட்டுக்கொள்கிறேன் என்றார் அனான்.

எண்ணெய் விற்று உணவுப் பொருள் வாங்க ஈராக்கை அனுமதிக்கும் திட்டம் முன்னர் அமுலில இருந்தது. ஐ.நா ஆதரவில் இந்தத் திட்டம் நடைபெற்றது.



இந்தத்திட்டத்தில் அனானின் மகனுக்கு உள்ள வர்த்தக தொடர்பு குறித்து பல்வேறு கேள்விகளுக்கு விடைதெரியாமல் உள்ளதாக இடைக்கால விசாரணை அறிக்கை தெரிவிக்கிறது. (து)

# சார்க் மாநாடு எப்பொழுது நடக்கும் மாலைதீவு அதிபர் பேட்டி

(புதுடில்லி)

இரண்டுமுறை தளளிவைக்கபபட்ட சார்க் மாநாடு எந்தத் திகதியில் நடந்தாலும், இந்தியாவும், பாகிஸ்தானும் கலந்துகொள்ளத் தயாராக இருக்கின்றன என்று மாலைதீவு அதிபர் மமூன் அப்துல் கயூம் கூறினார்.

தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு (சார்க்) மாநாடு, கடந்த ஜனவரி 9ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை நடத்தத் திட்டமிடப்பட்டது. சார்க் அமைப்பில் இந்தியா, இலங்கை, மாலைதீவு, நேபாளம், வங்கதேசம், பாகிஸ்தான், பூடான் ஆகிய ஏழு நாடுகள் இடம்பெற்றுள்ளன.

டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி தாக்குதலில், சார்க் நாடுகளில் இந்தியா, இலங்கை, மாலைதீவுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

அதனால், ஜனவரியில் நடக்கவிருந்த சார்க் மாநாடு ஒத்திவைககப்பட்டது. மூன்று நாள மாநாடு இரண்டு நாளாகக் குறைக்கப்பட்டு பெப்ரவரி 6ஆம் திகதி நடத்த முடிவுசெய்யப்பட்டது.

அதற்குள், நேபாளத்தில் ஜனநாயக ஆட்சியை மன்னர் ஞானேந்திரா தூக்கி எறிந்தார். நாட்டில் அவசர நிலையைப் பிரகடனம் செய்தார். அத்துடன் மாநாடு நடககும் வங்கதேசத்தில் பாதுகாப்புப் பிரச்சினைகளைக் காரணம் கூறி மாநாட்டில் பங்கேற்க முடியாது என்று இந்தியா மறுப்புத் தெரிவித்தது.

இந்நிலையில் ஆறுநாள் பயணமாக டில்லி வந்துள்ள மாலைதீவு அதிபர் கயூம், பிரதமர் மன்மோகனைச் சந்தித்துப் பேசினார். அதன் பின் நேற்றுமுன்தினம் நிருபர்களைச் சந்தித்த கயூம,

இரண்டுமுறை சார்க் மாநாடு தள்ளி வைக்கப்பட்டது. சார்க் அமைப்பின் தற்போதைய தலைவராக பாகிஸ்தான் உள்ளது. மாநாட்டை எந்தத் திகதியில் நடத்தலாம் என்பது குறித்து விரைவில் முடிவாகும். எந்தத் திகதியில் மாநாடு நடந்தாலும், அதில் இந்தியாவும், பாகிஸ்தானும் பங்கேற்கும் என்று தெரிவித்துவிட்டோம்.

மற்ற நாடுகளுக்கு எந்தத் திகதி சாதகமாக இருக்கிறதோ அந்தத் திகதியில் மாநாட்டை நடத்தினாலும், நாங்கள் பங்கேற்போம். ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி வழங்க மாலைதீவு முழு ஆதரவளிக்கும் எனக் கூறினார். (து)

# 56 இலட்சம் ரூபா ஊழல் வழக்கு சட்டமன்ற சபாநாயகருக்கு நோட்டீஸ்

(சென்னை)

56 இலட்சம் ஊழல் வழக்கில் தமிழக சட்டமனறச் சபாநாயகர் சி.பி.ஐ. நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென்ற உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுளள்து.

இந்த வழக்கின் விசாரணையைத் துரிதமாக நடத்த வேண்டுமென்றும் நீதபதி ஆணையிட்டார்.

1983இல் காளிமுத்து வேளாணத்துறை அமைச்சராக இருந்தபோது அவரது பரிந்துரையின் பேரில் மோட்டார் வாகனங்கள் வாங்குவதற்காக நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் ராபின் ஜெயின் என்பவர் 56 இலட்சம் ரூபா கடன் வாங்கினார். இதற்காக ராபின் ஜெயின் போலி ஆவணங்களைக கொடுத்ததாகப் புகார் எழுந்தது.

இது தொடர்பாக ராபின் ஜெயின், காளிமுத்து உளளிட்டோர் மீது சி.பி.ஐ வழக்குப் பதிவு செய்து சென்னையிலுள்ள சி.பி.ஐ நீதிமன்றத்தில் விசாரணையும் நடைபெற்றது.

இந்த வழக்கிலிருந்து காளிமுத்து விடுவிக்கப்பட்டதை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் அவர் விசாரணைக்கு நேரில் ஆஜராக வேண்டுமென உத்தரவிட்டது.

இதை எதிர்த்துக காளிமுத்து உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்து உயர் நீதிமன்ற உத்தரவுக்கு இடைக்காலத்தடை பெற்றார்.

இந்நிலையில் நீதிபதிகள் அஜித் பிரஜாஜித், எஸ்.எச்.கபாடியா ஆகியோர் காளிமுத்துவின் மேல்முறையட்டு மனுமீது நேற்று முன்தினம் இறுதித் தீர்ப்பு வழங்கினர்.

ராபின் ஜெயின் ஊழல் வழக்கில் காளிமுத்து நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென அவர்கள் தீர்ப்பளித்தனர்.

இந்த வழக்குப் பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வருவதாகக் கூறிய நீதிபதிகள் இதை விரைவாக விசாரித்துத் தீர்ப்பு வழங்கவேண்டுமென்று சி.பி.ஐ நீதிமன்றத்துக்கு உத்தரவிடடனர். (து)



இந்தோனேஷியாவில் உள்ள நியாஸ் தீவில் ஏற்பட்ட பூகம்பத்தினால் குனுங்சிதோலி நகரமே தரைமட்ட மானது. கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிர் பிழைத்த தனது நான்கு வயது மகன் ராமதானை அள்ளி அரவணைத்துச் செல்லும் தாய் யாஸ்மினா.

# 8 வயது சிறுமிக்கு இரக்கமற்ற சித்திரவதை

வீட்டுவேலை செய்துவந்த 8வயதுச் சிறுமி, இரும்புக் கம்பியால் சூடுவைத்து கொடுமைப்படுத்திய சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. ஒரிசா மாநிலத்தின் பலசூர் மாவட்டத்தின் ஜலேஸ்வர் பகுதியில் இச்சம்பவம் நடந்துள்ளது.

இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரிசாவின் பத்ரக் மாவட்டம் பலியபந்தா பகுதியைச் சேர்ந்த ரிக்ஷா ஓட்டுநர் தயூப். இவருடைய 8 வயது மகள் நசீமா பேகம் ஜலேஸ்வரில் உள்ள ஹாகோ என்பவரின் வீட்டில் வீட்டு வேலைக்காக 3 மாதங்களுக்கு முன்பு சேர்ந்தார் நசீமா. அந்த வீட்டில் தங்க நகை காணாமல் போனது அதை நசீமாதான் திருடியதாகக் கருதிய ஹாகோ மற்றும் அவருடைய மனைவி குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி அச் சிறுமிக்கு இரும்புக் கம்பியால் சூடு போட்டுள்ளனர்.

தொடர்ந்து நசீமாவின் உடலில் பல்வேறு இடங்களில் இது போன்று சூடு போடப்பட்டுள்ளது. வலி பொறுக்கமுடியாமல் சொநத ஊருக்குத் திரும்பிய நசீமா, நடநத விடயத்தை பெற்றோரிடம் தெரிவித்தார். அதையடுத்து பொலிஸில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. ஹாகோ மற்றும் அவருடைய மனைவி தலைமறைவாக உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மையில் இதுபோன்ற சம்பவம் நுவாபாடா மாவட்டத்தில நடந்தது. ஆதரவில்லாத சிறுவனான பிரசாந்த நாஹக்கை, அவன வேலைசெய்து வந்த வீட்டின் உரிமையாளர் சித்தரவதை செய்ததாகப் புகார் கூறப்பட்டது. சிகிச்சைக்குப் பிறகு அச் சிறுவன் புவனேசுவரத்தில் உள்ள எஸ்.ஓ.எஸ். சிறுவர்கள் கிராமம் என்ற தொண்டு நிறுவனத்தில் சேர்க்கப்பட்டுள்ளான். (து)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 46



பெரியவரிடத்தில் அதிகம் பேசி அவர்களுடைய அருள் நிலைக்கு மாறு செய்யக்கூடாதென்று கருதி அவரை வணங்கி விட்டுப் புறப்பட்டேன். தீபாவளிக்கு மூடிய கோவிலை மீளவும் வைகாசி பூர்வபக்ஷம் த்ருதியை அன்று திறப்பார்கள்.

ஆதி சங்கராசாரியாருடைய சமாதி:, கோயிலுக்கு மேற்கே சிறிது தூரத்தில் இருக்கின்றது.

கேதாரத்தில் பஞ்சகங்கை, பஞ்ச குண்டங்கள்இருக்கின்றன.

அமிர்தகுண்டம், ஹம்ஸ குண்டம், ரேதசகுண்டம், ஈசான குண்டம், உதக குண்டம் என்பன. இந்த ஐந்து குண்டங்களுக்கும் போய் ஆசமனம் செய்து சிரசில் நீரைத் தெளித்துக்கொண்டோம்.

ஐந்தாவது உதககுண்டம் மிகவும் புனிதமானது. சிறு கோயிலுக்குள் இருக்கின்றது.

**''கேதாரம் உதகம் பீத்வா**
**புனர்ஜன்ம நவித்யதே''**

கேதாரத்தில் இந்த தீர்த்தத்தைப் பருகியவருக்கு மறு பிறப்பு கிடையாது என்று பொருள்.

ஸ்ரீசைலம் தரிசித்தால் முத்தி
காசியில் மரித்தால் முக்தி
கேதாரத்தில் இந்த நீரைப் பருகினால் முத்தி
நடு நாடாகிய சுழுமுனையைத் தரிசித்தால் முத்தி

**ஸ்ரீசைலம் தரிசனாத் முத்தி**
**வாரணாயாம் ம்ருதஸ்யச**
**கேதாரம் உதகம் பீத்வா**
**ஸ"ஷ"ம்னாநாடீச தர்சனாத்**

முன் கூறியபடி பனிக்கட்டியால் மூடிய திருக்கோயிலில் வைகாசி த்ருதியை தினத்தன்று திறக்கும்பொழுது பெருமானுக்குச் சாத்திய மலர் வாடாமலும், ஏற்றிய தீபம் அணையாமலும் இருக்குமாம். கேதாரலிங்கம் பன்னிரு ஜோதிலிங்கங்களில் ஒன்று.

கேதாரம், பத்திரிநாத் யாத்திரைக்கு ஏற்ற காலம் ஆவணி மாதந்தான் என்பதை யாத்ரீகர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

பின்னர் மலையைவிட்டு வேகமாக இறங்கி'வந்தோம். ஏறுகிற பொழுது இருந்த துன்பம் இறங்குகின்ற பொழுது இல்லை. செல்வம் சேருவது அரிது. செலவழிப்பது எளிது. முகில்கள் எங்களைத் தழுவிக்கொண்டன. இமயமலையில் வாழும் மக்கள் ஏழைகள். அங்கு ஊசியும், நூலும் கிடைப்பதில்லை. நாங்கள் வழிநெடுக அவர்களுக்கு ஊசி, நூல் கொடுத்து அவர்களை மகிழ்வித்தோம். உருத்திரப்பிரயாகை வந்து சேர்ந்தோம்.

## பத்ரிநாத்

24.9.61காலை 11.40க்கு பத்ரிநாத் திருத்தலத்தை காணும் அவாவுடன் பஸ்ஸில் புறப்பட்டோம். கொடிய வழி. கடிய பிரயாணம். என்னையும் பூசைப் பெட்டியையும் நான்கு விரற்கடைமேலே தூக்கித் தூக்கிப் போட்டது. எங்களுக்கு எந்த விநாடி கார் விழுமோ என்று அச்சம். பத்து, பதினைந்து கார்கள் விழுந்து விட்டன என்று பத்திரிகையில் படித்தோம்.

வழியில் கர்ணப்ரயாகையைக் கண்டோம். அங்கு அளகாநந்தியுடன் பிண்டர் என்ற நதி கூடுகின்றது. மறுநாள் பிப்லிகோட் வந்து சேர்ந்தோம். இடையில் மந்தாகினி அனாநந்தியுடன் சேரும் நந்தப் ப்ரயாகையும், சமோலியும் வந்தன. வழியில் மலை சரிந்து வழி பழுதானபடியால் 8மைல் நடந்து இலங்கு என்ற இடம்வந்து சேர்ந்தோம். அங்கு தங்குமிடமே கிடைக்கவில்லை. ஒரு சிறு இடத்தில் தங்கி மூட்டைப் பூச்சியினால் வாட்டமடைந்தோம்.

## ஜோஷிமடம்

ஜோஷிமடத்தை அடைந்தோம். அங்கு வாஸுதேவர் கோயிலைத் தரிசித்தோம். இங்கு சங்கராசாரியார் மடாலயம் ஸ்தாபித்திருக்கின்றார். அஷ்டபஜ விநாயகருக்கும், நவ துர்க்கையும், சிவபார்வதியும் கோயில் சுற்று மண்டபங்களில் காட்சி தருகின்றார்கள்.

28.9.61 அதிகாலை 5.45 மணிக்குப் புறப்பட்டோம். ஜோஷி மடத்திலிருந்து பத்ரிநாத் 19மைல். இரண்டு மைல் மிக்க இறக்கம். மலையடியில் விஷ்ணுகங்கை வந்து அளகாநந்தியுடன் கூடுகின்றது. அதைக் கடந்து இருமிகப்பெரிய மலைகளிடையே அளகாநந்தியின் கரையில் உள்ள வழியில் நடந்தோம், பெருமழை பொழிந்து பல இடங்களில் வழி பழுதாகியிருக்கின்றது. நாங்கள் குரங்குகள் தாவுவது போலவும், ஊர்வன போலவும் வெகு துன்பப்பட்டுச் சென்றோம். ஒரு கடுகளவு தவறினால் அதலபாதாளத்திலுள்ள அளகாநந்தியில் விழுந்து ஜீவயாத்திரையே முடிவு பெற்றுவிடும். 8மைல் 7மணி நேரம் நடந்து பாண்டுகேச்வரம் என்ற இடத்தை அடைந்தோம்.

29.9.61 பதரிகாச்ரமம் சேர்ந்தோம். பத்ரிகாச்ரமம் ஊர்பெரியதாகவும், அழகாகவும் இருக்கின்றது. கோயிலுக்கெதிரில் தப்தகுண்டம் என்ற வெந்நீர் குண்டத்தில் குளித்தோம்.

பதரிகாச்ரமம் 10,300அடி உயரம் அதிகமான குளிர். நான்கு நாட்கள் தொடர்ந்து நடந்து சென்றோம். எங்களுக்கு யார் வெந்நீர் வைத்துத் தருவார்கள்; "உல்கீன்ற பச்சை உமையண்ணன்'' என்று அருணகிரியார் பாடி அருளியபடி எம்பிராட்டியின் தமையனார் நாராயணார் வெந்நீர் குளமே அமைத்து வைத்திருக்கின்றார். அதில் இறங்கியவுடன் சொல்ல முடியாத ஆனந்தம் அதைவிட்டு வெளியே வரமனம் வரவில்லை. கால் வலியும், உடல்வலியும் தீர்ந்தன. மாலை நாராயண மூர்த்தியைத் தரிசித்தோம்.

பதரி இலந்தை-இலந்தை வனம் ஆதலால் பதரிகாச்சிரமம் எனப் பெயர் பெற்றது. நர நாராயணர்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் (பத்து லட்சம்) இங்கு தவம் புரிந்தார்கள். இமயமலையில் அளகாநந்திக் கரையில் இத்தலம் அமைந்திருக்கின்றது. அருகில் ரிஷி கங்கா வந்து இந்நதியுடன் கூடுகிறது.

நாங்கள் எத்தனையோ மலைகளைக் கடந்து பத்ரிகாச்ரமம் சென்றோம். நாராயணர் அமர்ந்த வண்ணம் தவம் புரிகின்ற திரு உருவத்துடன் விளங்குகின்றார். சங்கராசாரியரால் இத்தலம் மேலும் விளக்கமுற்றது.

இன்றும் பதரி நாராயணணைப் பூசிப்பவர் கேரள நாட்டு நம்பூதிரியார் ஆவார்.

பதரிகாச்ரமம் என்ற இக்கோயிலை வைகாசி அக்ஷய திரிதியைன்று திறப்பார்கள். ஐப்பசி முடிய ஆறுமாதம் நரர்கள பூஜை. கார்த்திகை முதல் தேதியன்று கோயிலைப் பூட்டிவிடுவார்கள். பின்னர் ஆறுமாதம் சுரர் பூஜை நாரத முனிவர் பூஜிப்பதாக ஐதீகம். கோயிலும் ஊரும் ஆறுமாதம் பனியால் மூடப்பெறும். மக்கள் யாரும் வசிப்பதில்லை.

(தொடரும்)

# தந்தை செல்வாவின் பிறந்ததின நிகழ்வு




தந்தை செல்வாவின் நினைவு அறங்காவலர் குழுவினால் நேற்று தநதை செல்வாவின் 107ஆவது பிறந்ததின நினைவுநாள் நிகழ்வு கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.பொது நூலகத்திற்கு அருகில் உள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு நேற்று மலர்மாலை அணிவிக்கபபட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்விற்கு தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஆயர் ஜெபனேசன், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சிவாஜிலிங்கம், ஈழவேநதன், சிவனேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தந்தை செல்வாவின் சிலைக்கு ஜெபனேசன் அடிகளார், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சிவாஜிலிங்கம் ஆகியோர் மலர்மாலை அணிவித்தார்கள். இதையடுத்து இந்நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் மலரஞ்சலி செலுத்தினார்கள். இறுதியாக மாவை சேனாதிராசா தந்தை செல்வா பற்றி உரையாற்றினார்.

(க-19)

# ஈ.பி.டி.பி.வாகனம் மீது தாக்குதல் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் காயம்

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி ஆறுமுகத்தான் குடியிருப்பு என்னுமிடத்தில் ஈ.பி.டி.பியினர் பயணம் செய்த வாகனத்தின் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தினர்.

இதில் பாதுகாப்புக் கடமைக்குச் சென்ற பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு ஈ.பி.டி.பி. அலுவலகத்திலிருந்து செங்கலடியிலுள்ள அலுவலகத்திற்கு வாகனம் ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்த செங்கலடி அலுவலக ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் ரவி எனப்படும் தர்மலிங்கம் இளமாறன் என்பவரை இலக்குவைத்து இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

தாக்குதலை மேற்கொண்ட நபர்கள் பதுங்கியிருந்து முதலில் கைக்குண்டை வீசிய பின்பு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இந்த துப்பாக்கிப் பிரயோகத்திலேயே குறிப்பிட்ட பொலிஸ் சார்ஜன்ட் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவத்தையடுத்து அப்பிரதேசத்தில் தேடுதல் மேற்கொண்ட பொலிஸாரினாலும் இராணுவத்தினராலும் கைவிடப்பட்ட நிலையில் ரி-56 ரக துப்பாக்கியொன்று மகசீனுடன் கைப்பற்றப்பட்டுள்ளது.

(க)

## இன்று ஒரு தகவல்

# வாகன வசதிகள்

ஒருவர் உடல் முழுவதும் கட்டுப் போட்டுக்கொண்டு வந்து நின்றார். "என்ன நடந்தது?" என்று பரபரப்போடு கேட்டேன். "ஒன்றுமில்லை வரும் வழியில் ஒரு சிறிய விபத்து அது தான் இப்படியாகி விட்டது" என்றார் மிகச் சாதாரணமாக ." சிறிய விபத்தா? அதற்கா இப்படி உடம்பு முழுவதும் கட்டு?" என்றேன். "சும்மா ஒரு எச்சரிக்கைக்காக அப்படிக் கட்டுப்போட்டிருக்கி றேன்" என்றார் அவர். ஒரு மாதியான ஆள். அப்படித்தான் பேசுவார். "சரி என்ன நடந்தது? விபரமாகச் சொல்லுங்கள்" என்றேன்.

"ஸ்கூட்டரிலே வேகமாக வந்து கொண்டிருந்தேன். எதிரில் ஒரு எருமைமாடு மெதுவாக வந்து கொண்டிருந்தது.இரண்டும் மோதிக் கொண்டன. நான் எட்டத்திலே போய் விழுந்தேன். எருமைக்கு ஒன்றும் நடக்கவில்லை. ஸ்கூட்டருக்கும் ஒன்றும் இல்லை. நான் தான் இப்படி ஆகிவிட்டேன்" என்றார்."கண்ணைத் திறந்து கொண்டுவரவேண்டும்" என்று புத்திமதி சென்னேன். "கண்ணைத் திறந்து கொண்டு வந்தும் இப்படி நடந்துவிட்டது" என்றார். "அது எப்படி நடக்கும்...நீங்கள் ஒதுங்கிப் போயிருக் கலாமே" என்றேன்.

"கண்ணைத் திறந்து கொண்டு வந்தது நான் அல்ல. எருமை மாடு" என்றார். இப்படித்தான் அவர் பேசுவார். அதனால் தான் அவரை ஒரு மாதிரியான ஆள் என்று சொன்னேன். அவர் எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும் ஆனால் எல்லோரும் இப்படி அலட்சியமாக இருக்கக்கூடாது .

விபத்தை விலை கொடுத்து வாங்கக்கூடாது. விபத்தைத் தடுக்க வேண்டுமானால் விலை கொடுக்கலாம். அதற்கு எப்படி விலை கொடுக்கவேண்டும் என்றால்... **Electronic Speed Control Unit**- ஐ வாங்கி வாகனங்களில் பொருத்தலாம். பஸ்களும், லொறிகளும், மோட்டார் சைக்கிள்களும் வேகத்தைக் குறைத்தாலே பல விபத்துக்களைத் தடுக்கலாம்.

**Electronic Speed control Unit** எனும் இக்கருவியின் செயற்பாடு என்ன தெரியுமா? அளவுக்கு மீறி ஒரு வாகனம் வேகமாகச் சென்றால், உதாரணமாக மணிக்கு 60 கிலோ மீற்றர் வேகத்திற்கு மேல் சென்றால் உடனே அக் கருவி 'பீப், பீப்' என்று ஒலி எழுப்பும். அந்தச் சத்தத்தைக் கேட்டதும் வண்டிச் சாரதி வேகத்தைக் குறைக்கவேண்டும்.

அப்படி குறைக்காது இன்னமும் வேகமாகப் போனால் எஞ்சின் தானாகவே நின்று விடும். அதுமட்டுமன்றி அதற்குப் பிறகு ஒரு 5 நிமிடத்திற்கு வாகனத்தை இயக்க முடியாது. அந்த இடத்திலேயே நிற்கவேண்டியது தான். 5 நிமிடத்திற்குப் பிறகு தான் அந்த இடத்தை விட்டுப் புறப்படலாம். அதனால் ஓவர் ஸ்பீற் போவதற்கு யாரும் முயற்சிக்க மாட்டார்கள். வேகத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் விலை மதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்ற முடியும். அதனாலே இதை ஒரு அசௌகரியமாக யாரும் நினைக்கக்கூடாது.

முன்பு பஸ்களில இக் கருவியை பொருத்தியிருந்தார்கள். ஆனால் சிலர் மிகவும் கெட்டித்தனமாக அக் கருவியின் இணைப்பைத் துண்டித்து விட்டு வழமை போல் படுவேகமாகவே வாகனங்களைச் செலுத்த ஆரம்பித்து விட்டார்கள்.

காரில் செல்பவர்களுக்கும் குடும்பம் இருக்கிறது. வீதியில் போகிறவர்களுக்கும் குடும்பம் இருக்கிறது. அதை எல்லோரும் நினைத்துப் பார்க்கவேண்டும். இந்த வேகக்கட்டுப்பாட்டுக் கருவியை யாரும் சுலபமாக எதையும் செய்து விடமுடியாத அளவிற்கு அதைப் பொருத்தவேண்டும் என்கிறார் சிலர்.

நீண்டதூர பயணம் செல்லும் பஸ்கள் எல்லாம் குளிரூட்டப்பட்ட, தொலைக்காட்சி வசதி கூட சிலவற்றில் செய்யப்படுகிறது. அவற்றிற்காக செலவளிக்கும் பணத்தில் இதுபோன்ற வேகக்கட்டுப்பாட்டுக் கருவி மற்றும் **VHF** டிரான் சீவர் போன்றவற்றுக்காக செலவளிக்கலாம்.

வண்டி நடுவழியில் திடீரென்று நின்றுவிட்டால் அல்லது எதிர்பாராமல் விபத்து ஏற்பட்டுவிட்டால் உடனே தகவல் தெரிவிப்பதற்கும், உயிரைக் காப்பாற்றுவதற்கும் இந்த VHF என்ற வயர்லெஸ் வசதி உதவியாக இருக்கும் செலவை ஒரு பொருட்டாகக் கருதாது இந்த வசதிகளைச் செய்தால் விபத்துக்களை பெருமளவு தவிர்க்கலாம். விபத்துக்களுக்கு எவ்வளவோ காரணங்கள் இருக்கிறது. அவை எல்லாவற்றையுமே கவனித்து சீராக்க வேண்டும். எனக்குத்தெரிந்த நண்பர் ஒருவர். அவர் ஒரு பஸ் சாரதியாக இருக்கிறார். அவரிடம் ஒருநாள் இந்த வீதி விபத்துக்களைப் பற்றி பேசிக்கொண்டிருந்தேன். அவர் முரட்டு சுபாவம் கொண்டவர். அதனால் அவரிடம் சொன்னேன்.. இதுபோன்ற உங்கள் சுபாவத்தை இனி நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். வீதியில் போகிறவர்களும் மனிதர்கள் தான். பஸ்ஸில் செல்பவர்களும் மனிதர்கள் தான். மனிதனுக்கு மனிதன் மரியாதை கொடுக்கவேண்டும். அப்படி என்று அடுக்கிக் கொண்டே போனேன். "நீங்கள் சொல்வது போல் தான் ஒருநாள் மனிதனுக்கு மரியாதை கொடுக்கப் போய் ஒரு சின்ன விபத்து நடந்துவிட்டது" என்றார் அவர்.

"அது எப்படி" என்றேன். ஒருநாள் நான் செலுத்திச் சென்ற பஸ்ஸில் ஒரு வயதான தாத்தா நின்று கொண்டே பிரயாணம் செய்தார். பஸ்ஸில் உள்ளவர்கள் யாரும் அவருக்கு இடம் கொடுக்கவில்லை. நான் அவர் மீது இரக்கப்பட்டு .... "என்ன செய்தீர்கள்" என்றேன். "நான் எழுந்து அவரை எனது இடத்தில் அமர வைத்தேன்" அப்படி என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# எமது அமைப்பையும், மக்களையும் பலவீனப்படுத்த அரசு முயன்றால் விபரீதமான விளைவே ஏற்படும் !

## சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை



(சுவிற்சர்லாந்து)

**ஸ்ரீலங்கா அரசு எங்களுடைய விடுதலை அமைப்பையும் மக்களையும் பலவீனப்படுத்துகின்ற முயற்சிகளில் தொடர்ந்து தீவிரமாகச் செயற்படுமானால் நிச்சயமாக தலைவர் மிக விரைவில் ஏதோ ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பார் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

ஐ.பி.சிக்கு நேயர்களுடனும் மக்களுடனும் கருத்துக்களை பகிர்ந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஐரோப்பிய பயணத்தின் நோக்கம் எமது மக்களுடைய எதிர்பார்ப்புக்களை இன்றுள்ள அரசியல் நிலைமைகளை,களநிலைமைகளை சர்வதேச சமூகத்திறகுத் தெளிவாகவும் நேரடியாகவும் எடுத்துச் செல்வதாகும். முக்கியமாக சமாதானப் பேச்சுவார்த்தைகள் தேக்கமடைந்து நெருக்கடி நிலைக்கு உட்பட்டு மக்கள் முழு அளவில் ஏமாற்றம் அடைந்துள்ள இச் சூழலில குறிப்பாக, சுனாமியால் தாயகப் பிரதேசம் பேரழிவைச் சந்தித்து நிற்கின்ற இந்நிலையில், சர்வதேச சமூகம் எமது மக்களுக்கு செய்ய வேண்டிய மனிதாபிமான உதவிகள் பற்றிய கோரிக்கையை முன்வைக்கும் நோக்குடன தான் இப் பயணத்தை நாம் மேற்கொண்டுள்ளோம்.

இப் பயணத்தின் போது 5ஆவது நாட்டிற்கு நாம் வந்துள்ளோம்.நோர்வே, சுவீடன், ஜேர்மனி,பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்குச் சென்றுவிட்டு சுவிற்சர்லாந்து வந்துள்ளோம். அனைத்து நாடுகளிலும் அங்குள்ள வெளியுறவுத் துறையினரையும் அங்கே உள்ள பொருளாதார அபிவிருத்திக்கான அமைச்சர்களையும் வெளியுறவு அமைச்சர்களையும் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களை சேர்ந்த உயர் பிரதிநிதிகள் எனப் பலரையும் சந்தித்து நிலைமைகளை தெளிவாக்கி வருகிறோம்.

### வெளிநாட்டுப் பயணம்

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்து பலரை சந்திக்கின்ற போது நாங்கள் உணர்ந்து கொண்டது அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்ற தவறான பிரச்சாரங்கள், சர்வதேச சமூகத்தின் மத்தியில் எவ்வளவு தூரம் ஆழமாகப் பதிய வைக்கின்றது என்பதை அவர்களுடைய கருத்து வெளிப்பாடுகள் மூலம் எம்மால் உணரக்கூடியதாக இருந்தது.

இப்பயணத்தின் ஊடாக நேரடியாக அவர்களுக்குள்ள சந்தேகங்கள் அவர்களுடைய எதிர்பார்ப்புக்களுக்கு நாங்கள் தெளிவாக உண்மை நிலைப்பாடுகளை எடுத்து விளக்குகின்ற போது தான் அவர்களுக்கு அங்குள்ள நிலைமைகளை சரியாகப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

### தவறான பிரச்சாரம்

அரசு தவறான பிரச்சாரங்களை கட்டவிழ்த்து விட்டுள்ளது. கள நிலைமைகளைப் பற்றிய நிலைப்பாடுகள், எதிர்பார்ப்புக்கள் பற்றி தற்போது ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடிகள் பற்றி எல்லாம் ஒரு தவறான நிலைப்பாடுகளையே சர்வதேச அளவில் எடுத்துக் விளக்கியுள்ளது.

நாம் எமது மக்களுடைய நியாயமான எதிர்பார்ப்புக்கள்,கள நிலைமைகள், மனிதாபிமான நெருக்கடிகளை எடுத்துக்கூறியுள்ளளோம். அதனை உரிய கரிசனையோடு அவர்கள் உள்வாங்கிக்கொண்டார்கள்.

நிச்சயமாக எதிர்காலத்தில் தமிழ் மக்களுடைய அரசியல் முன்னெடுப்புக்களுக்கு இச் சர்வதேச சமூகம் பக்கபலமாக இருக்கக்கூடிய சூழலை நோக்கி முன்னேற்றம் அடைந்து கொண்டு வரக்கூடிய சாத்தியப்பாடுகளை எங்களால் உணரக்கூடியதாக இருந்தது.

### பயணம் தொடரும்

சுனாமிக்குப் பின் சர்வதேசத்திடம் இருந்து பெருமளவு உதவிகளை அரசு பெற்றுக்கொண்டு எமது தாயகப் பகுதிகளுக்கு எவ்வித உதவிகளும் பகிர்ந்தளிக்கப்படாத நிலையில் சர்வதேச ரீதியில் அவர்கள் புலிகளுடன் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்திருப்பதாகவும் அது தமிழ் மக்களுக்கும் தாங்கள் பகிர்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருப்பதாகவும் ஒரு செய்தியை பரப்பி வருகின்றார்கள். இதனுடைய உண்மை நிலையை எடுத்து விளக்கும் நோக்குடன் தான் இவ் விஜயத்தை நாம் முக்கியமாக மேற்கொணடுள்ளோம்.

அந்த வகையில் எமது பயணம் மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.மேலும் .பல நாடுகளுக்கு செல்லவுள்ளோம்.

### தலைவரின் பொறுமை

நாங்கள் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துவிளக்குகின்றபோது அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "எமது தலைவர் இவ்வளவு பொறுமை காப்பதை நினைத்து நாங்கள் ஆச்சரியப்படுகிறோம்" என்று கூட பல நாட்டுப்பிரதிநிதிகள் எங்களோடு பேசுகின்ற போது தெரிவித்தார்கள்.

அந்தளவிற்கு தாயகத்திலே நடைபெறுகின்ற தாக்குதல்கள் மூன்று வருடகால யுத்தநிறுத்த உடன் பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்படுத்தப்படு கின்ற நெருக்கடிகள் எல்லாவற்றையும் அநேகமா னோர் புரிந்துகொண்டுள்ளனர்.

உண்மையில் தலைவர் பொறுமை காக்கிறார். முடிந்தளவு உச்சப் பொறுமையை நாங்கள் கடைப்பிடிக்கின்றோம் என்று தான் நான் கருதுகிறேன்.

மட்டக்களப்பிற்கு சென்றபோதிலும், எமது மக்கள் புலம்பெயர் நாடுகளுக்கு வருகின்றபோதிலும் எமது மக்கள் கேட்கின்ற கேள்வி அதுதான் "நீங்கள் இனியும் ஏன் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள்" இப்படியே விட்டுக்கொண்டிருந்தால் எமது போராளிகள், பொறுப்பாளர்கள் எல்லோரையும் இழந்து கொண்டிருக்க முடியாது என ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றார்கள்.

### போருக்கு வலிந்து இழுக்கும் அரசு

உண்மையில் அதுதான் முக்கியமான கட்டத்தில் நாங்கள தொடர்ச்சியாக சீண்டப்படுவதும் எங்களுடைய விடுதலை அமைப்பையும்,மக்களையும் பலவீனப்படுத்துகின்ற முயற்சிகளில் தொடர்ந்து தீவிரமாக செயற்படுவார்களேயானால் நிச்சயமாக நாங்கள் மிக விரைவில் ஏதோ ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம்.

இறுதியாக மாவீரர் தின உரையில் தலைவரால் மிகத் தெளிவாக எமது நிலைப்பாடுகள் தெளிவுபடுத்தப்பட்டது. அதற்குப் பின்னர் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் எமது தாயகப் பகுதியில் ஏற்பட்ட போது நாங்கள் அதனை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருந்தோம்.

அக்கட்டத்தில் எமது தலைவர் அதற்கு முன்னுரிமை கொடுத்து எமது மக்களுடைய மீட்புப்பணி, மனிதாபிமானப்பணி அவர்களுடைய மறுவாழ்வுப் பணிக்கு நாங்கள் உடனடியாக பரிகாரம் தேடவேண்டியவர்களாக இருந்தோம். தலைவர் அதற்கும் முதன்மை கொடுத்தார்.

இவற்றையெல்லாம் சர்வதேச சமூகத்திற்கு நாங்கள் எடுத்து விளக்கினோம். அரசு உண்மையில் சமாதான சூழலையோ, அமைதிச் சுழலையோ எமது மக்கள் ஒரு தீர்வைப் பெறுகின்ற நியாயபூர்வமான முயற்சிகளையோ அவர்கள் ஏற்றுக்கொள்ளாத ஒரு தன்மை தான் அங்கே இருக்கிறது.

அவர்கள் சமாதான சூழலை சீர்குலைத்து புலிகளை சீண்டி அங்கே ஒரு யுத்த நெருக்கடியை ஏற்படுத்தி சர்வதேச அளவில் புலிகள் மீதும் தமிழ் மக்களுடைய நியாயமான அபிலாஷைகள், கோரிக்கைகள் அவர்களுடைய உரிமைப் போராட்டத்தை களங்கப்படுத்தும் நோக்குடன் தான் பல காரியங்களை செய்து வருகிறார்கள்.

இவ்விடயத்தில் எமது தலைவர் நிதானமானதும் தீர்க்கமானதுமான முடிவுகளை எடுத்து காய்களை நகர்த்தி வருகின்றார் என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்கின்ற சூழல் மிக விரைவில் வரும் என்பதை எங்களால் உணரக்கூடியதாக இருக்கின்றது.

தாயகத்தில் ஒரு பெரிய நெருக்கடியான சூழல் தான் தொடர்ந்து கொண்டிருக்கிறது.இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் எமது ஆதரவாளர்கள்,போரா ளிகள், பொறுப்பாளர்கள் தொடர்ச்சியாக கொல்லப்படுகின்ற நிலைமை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதற்கு மிக விரைவில் நாங்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டி யவர்களாக இருக்கின்றோம். நிச்சயமாக எமது தலைவர் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கின்ற காலம் நெருங்கி வருகின்றது என்று தான் கருதுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-4)

# அரச ஊழியர்களுக்கு 10 இலட்சம் ரூபா; கடன் திட்டம் இன்று முதல் அமுலாகிறது

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கான 10 இலட்சம் ரூபா கடன் திட்டம் இன்று முதல் அமுலுக்கு வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊழியரும் 5 ஆண்டுகால சம்பளப் பணத்தையோ அல்லது 10 இலட்சம் ரூபாவையோ கடனாகப் பெறமுடியும்.

இவற்றில் குறைந்த தொகை கடனாக வழங்கப் படும். அரச சேவையில் இணைந்திருக்கும் கணவனும், மனைவியும் தனித்தனியாக கடனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வீடுகளை கட்டுவதற்காக காணிகளை வாங்குவதற்கும், குடியிருப்புக்களை திருத்துவதற்கும், புதிய மனைகள் உருவாக்குவதற்கும் இத்தகைய கடன் உதவியைப் பெறமுடியும்.

வழமையான வழிமுறைகளில் இருந்து மாறுபட்டதாக வர்த்தக வங்கிகள் ஊடாக கடன்கள் வழங்கப் படும் என அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

இந்தக் கடனுக்காக ஒவ்வொரு ஊழியர்களிடம் இருந்தும் 4 சதவீத வட்டியே அறவிடப்படவிருக்கின்றது.

இதற்கு மேலாக வர்த்தக வங்கிகள் அறவிடும் வட்டியை அரசாங்கம் செலுத்தும். அரச ஊழியர்களுக்கு குறைந்த வட்டியை வழங்கும் ஆகக் கூடுதலான கடன் தொகை இதுவாகும். (க-9)

அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு - குறள்

வலம்புரி

# அறியாமையால் நடக்கும் ஆலய நிர்மாணங்கள்

"சமயம்" என்பது சமைத்தல் என்ற வினையடியிலிருந்து தோற்றம் பெற்றதாகும்.

சமைத்தல் என்றால் உணவுப் பொருள்களை உண்பதற்காக பதப்படுத்தல் எனப் பொருள்படும். அவ்வாறே சமைத்தல் உண்பதற்குப் பதப்படுத்துவது போல சமயம் மனிதனை அறநெறி வாழ்க்கைக்குரியவனாக பதப்படுத்துகின்றது.

இங்கு மனிதனை பண்படுத்துவதற்காகவே சமயம் உருப்பெற்றது. இறைவழிபாட்டின் ஊடாக பாவம், புண்ணியம் என்ற பதங்களை மனிதன் உணர்ந்து கொள்கின்றபோது அவன் தீங்கு செய்ய நினைப்பதில்லை.

இவ்விதம் இறைவழிபாட்டின் ஊடாக மனிதன் தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்வதோடு, அன்றாடம் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய உளத் தாக்கங்களையும் ஆற்றுப்படுத்திக் கொள்கிறான்.

மனிதனைச் செம்மைப்படுத்தும் பணியைச் செய்துவரும் சமயங்கள் தம்நிலை நின்று விலகுமாயின் அதன் விளைவு பாரதூரமானதாக அமையும்.

அதாவது சமயங்கள் மனிதனுக்காகவே அன்றி மனிதன் சமயத்துக்காகவல்ல. இதனை சமயத்தை வழிப்படுத்திச் செல்பவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

குறிப்பாக இந்து சமயத்தில் கூறப்படும் அறநெறிகள் அனைத்தும் மனித வாழ்வியலின் உயர்வை அடிப்படையாகக் கொண்டதாகும். "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்பது இந்து சமயம் போதிக்கும் தத்துவமாகும்.

அவ்வாறாயின் மக்கள் பணிசெய்வதே சமயத்தின் - ஆலயங்களின் தலையாய கடமை. இதனை பல ஆண்டுகளுக்கு முன்னர் ஆலயங்கள் ஊடாக நடைபெற்ற சமூகப் பணிகள் உறுதிசெய்கின்றன.

நிலச் சுவாந்தர்கள் தமக்குரித்தான நிலங்களை ஆலயங்களுக்கு கொடையாக வழங்க, ஆலயங்கள் அவற்றை நிலமற்றவர்களுக்கு வழங்கும். இதனூடாக பொருளாதார சமநிலை கடைப்பிடிக்கப்பட்டது.

அதேபோல் மக்களிடையே ஏற்படுகின்ற சமூகப் பிணக்குகளை தீர்த்து வைத்தல். குடிநீர் பெறுவதற்காக கிணற்று வசதிகளை ஆலயச் சூழலில் ஏற்படுத்திக் கொடுத்தல், தெருவிளக்கு ஏற்றுதல், கலைஞர்களுக்கு ஊதியம் கிடைக்கக்கூடிய வகையில் கலைத்துவ நிகழ்வுகளை ஆலயத்தில் நடத்துதல் அதன் ஊடாக மக்களை மகிழ்வித்தல் என்ற வகையில் பல்வேறு சமூகப் பணிகளை ஆலயங்கள் ஏற்படுத்தி வந்தன.

ஆனால், தற்போது ஆலயங்கள் அந்தப் பணிகளைச் செய்வதில் இருந்து விலகி வருவது வேதனைக்குரியதாகும். சமகாலத்தில் மக்களின் நிதியைப் பெற்று ஆலயங்கள் கட்டப்படுகின்றன. கூடவே ஆலய புனரமைப்புக்கென அரசும் நிதி வழங்குகிறது.

ஆலயங்கள் அழகுற அமைக்கப்படுவது தேவையானதொன்றே. அதற்காக சிறு தெய்வ வழிபாட்டிற்குரிய ஆலயங்களையும் கோடிக்கணக்கான ரூபா செலவில் அமைப்பது தேவையற்ற தொன்றாகும். சிறிய ஆலயங்களாக இருந்தாலும் அவை மக்கள் பணியாற்றுமாயின் அதன் பங்களிப்பு மிகப் பெரியதாகக் கணிக்கப்படும்.

ஆலயத்தை சூழவுள்ளவர்கள் ஓட்டைக் குடிசைகளில் வாழ்கின்றபோது - அங்குள்ள ஏழை மாணவர்கள் கல்வி கற்பதற்கு வசதியில்லாது இருக்கின்றபோது கோடிக்கணக்கான ரூபாய்களை செலவழித்து ஆலயங்களை அமைப்பதால் மக்களுக்கு கிடைக்கின்ற நன்மைதான் என்ன?

மக்கள் குடிசை வீடுகளில் இருக்க வானுயர்ந்த கோபுரங்கள் எழுப்பப்படுவது அறியாமையின் செயற்பாடேயாகும்.

எனவே ஆலயங்கள் தமக்குக் கிடைக்கின்ற நிதியைக் கொண்டு சமூகப் பணியாற்ற முன்வர வேண்டும். அவ்வாறு ஆலயங்கள் சமூகப் பணியாற்ற முன்வருமாயின் மக்களின் வாழ்க்கைத் தரம் நிச்சயம் உயர்வடையும். அந்த உயர்வு ஆலயத்தின் பால் - சமயத்தின் பால் நம்பிக்கையை மேலும் அதிகரிப்பதாக அமையும்.

## வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவும்

# சுகாதார ஊழியர் பதவி வெற்றிடங்களை நிரப்ப திறைசேரி அங்கீகாரம் மறுப்பு

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் சுகாதார சிற்றூழியர்களை நியமிக்கும் அதிகாரம் எமக்கு இல்லை. அது போன்று சுகாதார சேவைகள் அமைச்சருக்கு வடக்கு-கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் பணியாற்றுவதற்கு ஊழியர்களை நியமிக்கும் அதிகாரமும் இல்லை.

இவ்வாறு வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் எஸ்.குமாரவேற்பிள்ளை தெரிவித்தார்.

அமைச்சர், ஆளுநருக்கு சிபார்சு செய்தே இந்நியமனங்களை வழங்க வேண்டும். அவரால் மத்திய அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளுக்கு ஊழியர்களை நியமிக்கும் அதிகாரம் உண்டு.

மாகாண சபை நிர்வாகத்தின் பிரகாரம் இந்த ஏற்பாடே இருக்கின்றது என மேலும் அவர் தெரிவித்தார்.இதற்கிடையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுகாதார தொண்டர்களாக பணியாற்று வோர் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு முனனால் போராட்டம் ஒன்றை நேற்று முன்தினம் புதன்கிழமை காலை ஆரம்பித்திருந்தனர்.

இதில் சுமார் 40க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர். இது விடயமாக சுகாதார சேவைகள பணிப்பாளரையும் அவர்கள் சந்தித்தனர்.

இதன்போது தன்னால் உறுதியான முடிவு தர முடியாது எனவும் மேல திகாரிகளோடு தொடர்பு கொண்டு இதற்கான நடவடிக்கைகளை தன்னால் எடுக்க முடியும் என அவரைச சந்தித்த பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

சுகாதாரத் தொண்டர்களின் போராட்டம்பற்றி சுகாதார சேவைகள் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில், வடக்கு-கிழக்கு மாகாணததில் சுகாதார அமைச்சுக்கு பணி யாற்ற வென 15 ஆயிரத்து 510 ஊழியர்கள் தேவை, ஆனால் அரசாங்கம் 10 ஆயிரத்து 837 ஊழியர்க ளுக்கே அங்கீகாரம் ஆளணித் தேவைக்காக வழங்கியுள்ளது. இது 2002 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தாகும்.

தற்போது 6 ஆயிரத்து 540 ஊழியர்களே பணியாற்றுகின்றனர். 4ஆயிரத்து323 வெற்றிடங்கள் இன்னமும் நிரப்பப் படாமல் இருக்கின்றது.

திறைசேரியினது அங்கீகாரம் கிடைத்தாலே நியமனங்களை வழங்க முடியும். பற்றாக்குறையான ஊழியர்களைக் கொண்டு வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சுகாதார சேவைகள் ஆற்றப்படுகின்றது எனத் தெரிவித்தார். (க)

# அனுராதபுரம் வைத்தியசாலையில் வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை

## மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நோயாளர்களுக்கு சிகிச்சை

(அநுராதபுரம்)

அநுராதபுரம் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறவரும் வெளிநோயாளர்களுக்கான சிகிச்சை நடவடிக்கைகளை மட்டுப்படுத்த எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் நியாயமற்றது என்று சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

குறிப்பிடப்பட்ட வைத்தியசாலையில் நிலவும் வைத்தியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விரைவில் நியமிக்கப்படவுள்ள 200 வைத்தியர்களில் குறிப்பிட்ட சிலரை அநுராதபுரம் வைத்தியசாலையில் கடமையில் அமர்த்த நட வடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அநுராதபுரம் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறவரும் வெளி நோயாளர்களுக்கான சிகிச்சை நடவடிக்கைகளை மட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பிரிவிற்கு போதுமான வைத்தியர்கள் இல்லாமையினாலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக டாக்டர் லக்ஷமன் கம்லட் தெரிவித்துளளார்.

இதன்படி நேற்று முன்தினம் வைத்தியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவே வெளிநோயாளர்களுக்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப்படடன.

நாள ஒன்றிற்கு 800க்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுக் கொள்ள வைத்தியசாலைக்கு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான 5 வைத்தியர்கள் மாத்திர மேகடமையில் ஈடுபட்டுள்ளதாக வைத்திய அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார். (க-9)

# கூட்டுறவுச் சங்கங்களில் மோசடியா? கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் கிளைகள் ஊடாக ஆழிப் பேரலை அனர்த்தத்தால் பாதிப்புற்றமக்களுக்கு வழங்கப் படும்நிவாரணப்பொருட்கள் அதிகவிலையிட்டு விநியோகிக்கப்படுவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச்சங்களின் சமாசம் மறுத்துள்ளது.

இது குறித்து சமாசம்விடுத்துள்ள அறிக்கையில் ஆழிப் பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலக உணவுதிட்டத்தால் வழங்கப்படும் நிவாரணப்பொருட்கள் அரசாங்க அதிபரின் உத்தரவின் பேரில் ப.நோ.கூ.சங்கங்களின் கிளைகள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இப்பொருட்களில் 175ரூபா. பெறுமதியான நிர்ணயிக்கப் பட்டபொருட்கள் இதற்கான விலை இடப்படாமல் அலகு ரீதியாகவே வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் மேற்படி பொருட்கள் அதிகவிலைக்கு விநியோகிக்கப்படுவதாக உணமைக்குப்புறம்பான வதந்திகள் சில விசமிகளால்பரப்பப்பட்டு வருகிறது. இவ்வாறான வதந்திகளில் எவ்விதஉண்மையும் இல்லை. என்பதை யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறது.

மற்றும் 200 ரூபாபெறுமதியான நிவாரண முத்திரைக்குரிய பொருட்கள் மக்களின் விருப்பத்திற்கேற்ப நியாயமான விலைகளிலேயே விநியோகிக்கப்பட்டு வருகிறது. எனவே உண்மைக்கு புறம்பாக மேற்கொள்ளப்படும் இவ் விசமத்தனமான நடவடிக்கையில் எவ்வித உண்மையும் இல்லை என்பதை யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச்சங்களின் சமாசம் மீண்டும் வலியுறுத்தவிரும்புகிறது என்று உள்ளது. (க)

# நெஸ்பிரே அதிர்ஷ்டம்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுச் சங்கங்களினூடாக விற்பனை செய்யப்பட்ட நெஸ்பிரே பால்மாப்பக்கற்றை கொள்வனவுசெய்த வாடிக்கையாளருக்கான அதிஷ்டச்சீட்டிழுப்பு நேற்று நடைபெற்றது இதில் மூவர் வெற்றியாளர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

உ.டிலக்ஷிகா,(நாவலர்வீதி யாழ்ப்பாணம்), ர.நிஷாந்தன்(பிரதான வீதி யாழ்ப்பாணம்), இ.இராஜேஸ்வரன் (கே.கே.எஸ்.வீதியாழ்ப்பாணம்) ஆகிய மூவருமே அதிர்ஷ்டசாலிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச)

# ஆங்கில மொழிபாடத்தினை விருத்தி செய்யவேண்டும்

## அகில இலங்கை ஆசிரியர் சேவைசங்கம் கோரிக்கை

(கொழும்பு)

ஆங்கில மொழிப்பாடத்தினை விருத்திசெய்வதனை நோக்கமாகக் கொண்டு அகில இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் பல்வேறு கோரிகை அடங்கிய கடிதம்மொன்றை கல்வியமைச்சின் செயலாளர் டாக்டர் தாரா டி மெல் இடம் கையளித்துள்ளது.

சங்கத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் கொழும்பில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்ட டாக்டர் தாரா டி மெல்லிடம் இந்தக்கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் ஓய்வுபெற்றுள்ள தகுதியான ஆங்கில ஆசிரியர்கள் மீண்டும்சேவையில் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

ஆங்கிலக்கல்வி .தொடர்பாக நாடுமுழுவதும் முழுமையான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

கல்வியமைச்சின் ஆங்கிலக்கல்விப்பிரிவிற்கு பிரதிக் கல்விப்பணிப்பாளர் நாயகம் ஒருவர் உடனடியாக நியமிக்கப்படவேண்டும். ஆங்கிலக்கல்விப் போதனையை மேம்படுத்துவதற்காக ஆங்கில ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்கவேண்டும். ஆங்கில ஆசிரியர்களை தரம் உயர்த்துவதற்காக தரக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் போன்ற கோரிக்கைகள் இக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (க-9)

# தினசரி தியானம்

## சிவானந்தர் சிந்தனை

புலன்கள், பேருண்மைசேர்ந்த அண்டத்தை நோக்கிப்பாயும் இயற்கையான தன்மையுடன் படைக்கப்பட்டுள்ளன.

இந்த புறவினைகள் மனத்தின் அலைகளை சிதறடித்து அறிவாற்றலை பலவீனப்படுத்தி உள்ளுணர்வால் இயக்கப்படும் புலன்களது உணர்வுகளை திரையிட்டு மறைக்கிறது.

ஒற்றுமை வேற்றுமை எனப்புனைந்து கூறப்படுகிறது. பொய் மெய்யாக காட்சியளிக்கிறது துன்பம் இன்பமாக தோன்றுகின்றது.

உண்மைப்பொருளைக் காட்டிலும் நிழலானது கவர்ச்சியாக வந்து ஆசையைக்காட்டுகிறது. இதுதான் மதிகெட்ட அறியாமையில் உழலும் மனிதன் தொடர்ந்து செல்லும் மகிழ்ச்சியான பாதையாக இருக்கிறது. சிவானந்தர்

# சுனாமி பேரலைகளுக்குப் பின்னர் சமாதான முயற்சிகளுக்கு வாய்ப்பு

## பின்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் சுட்டிக்காட்டு

சுனாமிப்பேரலை உருவானதை யடுத்து இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையிலான சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச்செல்வதற்கான வாய்ப்பு உள்ளது என பின்லாந்து வெளியுறவு துறை அமைச்சர் எர்கி துமியோஜா தெரிவித்துள்ளார்.

பின்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் எர்கி துமியோஜாவை தமிழீழ அரசியல் விவகாரக் குழுவினர் சந்தித்துப் பேசினர். தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான தமிழீழக் குழுவினர் பின்லாந்து அமைச்சக அலுவலகத்தில் நேற்று முன்தினம் இச்சந்திப்பு நடைபெற்றது.

ஆழிப்பேரலையால உயிரிழந்தோருக்கு பின்லாந்து அரசின் சார்பில பின்லாந்து அரசின் ஆழ்ந்த இரங்கலை தமிழ்ச்செல்வன் குழுவினரிடம் அமைச்சர் எர்கி பகிர்ந்து கொண்டார். ஆழிப்பேரலைக்குப் பிந்திய மனிதாபிமான அடிப்படையிலான அனைத்து மீளமைப்புப் பணிகளுக்கும் பின்லாந்து அரசு உறுதியாக ஆதரவளிக்கும் என்று அவர் மீண்டும் உறுதியளித்தார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் நீடித்திருப்பதன் அவசியத்தையும் அமைதிப் பேச்சுகளை முன்னெடுத்துச் செல்லும் ஒரு வாய்ப்பாக ஆழிப்பேரலையின் பாதிப்புகள் உருவாகியுள்ளன என்றும் பின்லாந்து அமைச்சர் கூறினார்.

இதேவேளை இலங்கையில் நோர்வே அனுசரணையில் கடந்த மூன்று ஆண்டுகாலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் அமைதிமுயற்சிகள் மீது தமிழ்மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர் என சு.ப.தமிழ்ச் செல்வன்தெரிவித்தார். பொதுக் கட்டமைப்பு குறித்தும்யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை அரசு நடைமுறைப்படுத்தாமல் இருப்பது குறித்தும் பின்லாந்து அமைச்சரிடம் தமிழ்ச்செல்வன் விளக்கினார். மேலும், உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் தமிழ் மக்களின் வதிவிடங்களை ஆக்கிரமித்துக் கொண்டு தமிழ்மக்களின் நாளாந்த இயல்புவாழ்க்கையை அரசுசிதைத்துக் கொண்டு இருப்பதையும் சு.ப. தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டினார். (ச)

### மின்சார...

மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பவற்றை மறுசீரமைப்பதற்கு வெளிநாட்டு நிறுவனங்கள் உதவிவருவதாக ஜனாதிபதி தெரிவித்தார். மின்சாரசபை பெற்றோலியக்கூட்டுத் தாபனத்திற்குஒரு மில்லியன் ரூபாநஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மின்சாரசபையும் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் அரசாங்க வங்கிகளுக்கு பத்தாயிரம் கோடிரூபா கடன்செலுத்தவேண்டியுள்ளது.இந் நிறுவனங்களின் கடன்களை அடைத்து அவற்றை மறுசீரமைப்பதற்கு உலகவங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் திட்டங்களுடன் உதவ முன்வந்துள்ளன.ஆனால் ஒருசிலர் இதற்கு தடையாகவுள்ளனர்.

அரசாங்கத்தின் மின்சார சபையும்பெற்றோலியக்கூட்டுத்தாபனமும் பத்தாயிரம் கோடிரூபாவை இவற்றை கடனாகப்பெற்றுள்ளன மறுசீரமைப்பதற்கான பேச்சுவார்த்தையில் உலகவங்கியுடனும ஆசிய அபிவிருத்தி வங்கியுடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். நாற்பதுவருடங்களில் இக்கடனை வட்டியுடன் செலுத்தவேண்டும் ஆனால் அவற்றை செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் இருதுறைகளைச் சேர்ந்தவர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். மின்சார சபையை மறுசீரமைத்தால் அதன் பயன்கள் பாவனையாளர்களுக்கு கிடைக்கும். அத்துடன் கடன்களையும் மீளச்செலுத்தமுடியும். இல்லையெனில் எமக்கு நிதிகிடைக்காமல் போகும் அத்துறைகள் மறுசீரமைக்கப்பட்டால் கட்டணத்தில் ரூபா2.80 குறைவடையும் தற்போதுரூபா2.80 அதிகரிக்கப்பட்டுள்ளது.

அவற்றுக்கு ஏற்பட்டநட்டம் காரணமாக இவ் அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை மின்சாரசபை மறுசீரமைப்பு மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனங்களுக்கு விற்பனை என்பன தொடர்பாக அரசு மாற்றுகொள்கையை இனி மேற்கொள்ளாது எனவும் ஊழியர் தேவையற்ற வதந்திகளை நம்பி நாட்டில் இறைமைகளை பாதிக்க விடக்கூடாது எனவும் ஜனாதிபதி கேட்டுள்ளார் . (ச-8)

# ஆட் கொணர்வு மீதான விசாரணை யாழ்.நீதிமன்றில் நேற்றும் நடந்தது

(யாழ்ப்பாணம்)

1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் தம்மால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பிலான குற்றச்சாட்டினை கிருஷாந்தி குமாரசாமி வழக்கின் மரணதண்டனைக் கைதியான இராணுவவீரரான கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டுள்ளார்.

யாழ்ப்பாண மேலதிக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுக்களின் விசாரணைகள் நேற்றும்நேற்றுமுன்தினமும யாழ்.நீதிமன்ற மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரம் முன்னிலையில் நடைபெற்றன.

இதன்போது கைதுசெய்யபடடு காணாமல் போனநால்வர் தொடர்பில் ஆஜரான பெற்றோர் தமது பிள்ளைகளை, குறிப்பிட்ட சோமரத்ன ராஜபக்ஷவும் மற்றுமொரு இராணுவ வீரரான லலித்குமார் ஆகியோரே கைது செய்ததாக சாட்சியமளித்தனர்.

இதன்போது இதனை ஏற்றுக் கொண்ட ராஜபக்ஷ மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய அவசியம் இல்லை எனக் குறிப்பிட்டார்.

இந்தநிலையில் மனுதாரர்களின் சாட்சியங்கள் நெறிப்படுத்தப்பட்டு பிரதிவாதிகளின் சட்டத்தரணியின் குறுக்குவிசாரணைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.இதன் அடிப்படையில் எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் இந்தக் குறுக்குவிசாரணைகள் இடம்பெறவுள்ளன.

காணாமல் போனவர்களில் சந்திரசேகரன் என்பவர் காணாமல் போனது. தொடர்பாக அவரது மனைவி கோபிகா செய்த ஆட்கொணர்வு மனுவும் சுப்பிரமணியம் சுதாகரன் காணாமல்போனது தொடர்பாக அவரது தாய் கமலா தேவி செய்த ஆடகொணர்வு மனுவும், செல்லத்துரை நந்தகுமார் காணாமல் போனது தொடர்பாக அவரது சகோதரி செ.ரசிகலா செய்த ஆட்கொணர்வு மனுவும், பூதத்தம்பி ஜதீஸ்குமார் காணாமல் போனது தொடர்பாக அவரது தாய் செய்த ஆட்கொணர்வு மனுக்களே நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. (ச-19,04)

# போதைப்பொருள் கடத்திய 6பேர் மன்னார் கடற்பரப்பில் கைது

(மன்னார்)

இந்தியாவிலிருந்து மன்னாருக்கு படகுமூலம் ஹெரோயின் போதைப் பொருள்களை கடத்திய ஆறு பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதாகிய நான்கு இந்தியர்கள் உட்பட ஆறுபேரையும் எதிர்வரும் 12ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லா உத்தரவிட்டார்.

இவர்களிடமிருந்து ஒருகிலோ 200கிராம் நிறையுடைய ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

தலைமன்னார் கடற்பரப்பில் நேற்று முன்தினம் காலை சந்தேகத்திற்குகிடமான முறையில் சென்றுகொண்டிருந்த படகொன்றினை சோதனை செய்த கடற்படையினர் படகில் மறைத்து வைக்கப்படடிருந்த ஹெரோயின் போதைப் பொருளைக்கைப்பற்றியுள்ளனர்.

இதனையடுத்து படகில் பயணம் செய்த நான்கு இந்தியர்களையும் ஒரு இலங்கையரையும் கைதுசெய்து தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இதேவேளை இந்த கடத்தல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் பேசாலைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரையும் கைதுசெய்தனர்.

பொலிஸார் கைதுசெய்யப்பட்ட ஆறு சந்தேக நபர்களையும் மன்னார் மாவட்டநீதிமன்றில் ஆஜர் செய்தபோது நீதிவான் எதிர்வரும் 12ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் போதைப்பொருளை பகுப்பாய்வுப் திணைக்களத்தின் பரிசோதனைக்கு அனுப்புகுமாறும் உத்தரவிட்டார். (ச-8)

### எரிபொருள்களின்...

மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தப் புதிய விலையேற்றம் நடைமுறைக்கு வந்தால் கொழும்பில் பெற்றோல் விலை ரூபா 70.00 இலிருந்து ரூபா74.50 ஆகவும் டீசல் விலை 44 ரூபாயிலிருந்து ரூபா52.50 மண்ணெண்ணெய் விலை ரூ25.50 இருந்து ரூ43.30 ஆகவும் உயரும் என்று தெரியவருகிறது.

இந்த விலை அதிகரிப்புத் தொடர்பான பரிந்துரையினை எரிபொருள் விலை அதிகரிப்புக்கான ஆணைக்குழு ஏற்றுக் கொண்டிருப்பதாகவும், இது குறித்து அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

எனினும், இச் செய்தியை உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்த முடியவில்லை. (ச)

# இராணுவ வீரர்களின் சடலம் நேற்று கொழும்புக்கு வந்தது

(கொழும்பு)

ஹெட்டியில் உயிரிழந்த இராணுவத்தினரின் சடலங்கள் நேற்று இலங்கைக்கு கொண்டுவரப்பட்டன. விமானம் மூலம்கொண்டுவரப்பட்ட படையினரின் சடலங்களுக்கு கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து இராணுவமரியாதை செலுத்தப்பட்டது.

இராணுவ வீரர்களின் சடலங்கள் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக இராணுவப்பேச்சாளர் தயாரட்ண நாயக்கா தெரிவித்தார். படையினரின் இறுதிநிகழ்வுகள் பூரண இராணுவமரியாதையுடன் இடம் பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஹெய்டியில் ஐ.நா.அமைதிப் படையில் பணியாற்றிக்கொண்டிருந்தபோது தீவிரவாதிகளுடன் ஏற்பட்ட மோதலின்போது ஒரு படையினரும் கட்டடம் ஒன்றின் மீது ஏறிநின்று கண்காணிப்பு நடவடிக்கையில் இடுபட்டிருந்தபோது கட்டடம் இடிந்துவிழுந்ததில் மறறைய சிப்பாயும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-8)

# ஆளும் கட்சி எம்.பிக்களுக்கு ஏப்ரல் நான்கில் விசேட கூட்டம்

ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் விசேடகூட்டம் ஒன்று எதிர்வரும் 4ம்திகதி ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதியின் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவேண்டும் என ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தலுக்கு முகம்கொடுக்கக்கூடிய வகையில் கட்சியை தயார்படுத்த ஜே.வி.பி.யினருக்கும், சிறிலங்கா சுதந்திரகட்சியினருக்கும் இடையில் ஏற் பட்டுள்ள பிணக்குகளை சமரசம் செய்தல்.சமாதான முயற்சிகளின் எதிர்காலநடவடிக்கைகள் என்பன தொடர்பாக இக்கூட்டத்தில் பேசப்படவுள்ளதாக கட்சியின் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-4)

### மட்டு...

அவரது இடத்திற்கு பிரிகேடியர் திஸ்ஸஜெயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

23 ஆவது படைப்பிரிவில் மட்டக்களப்பு மற்றும் பொலநறுவை மாவட்டங்களை உள்ளடக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

### புலிகள்...

அதேவேளை அம்பாறையில் இடம்பெறும் சம்பவங்களை நிறுத்த தாம் உரிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளதாக உறுதியளித்த அவர், இராணுவத்தின் அத்துமீறலின் மத்தியிலும் விடுதலைப்புலிகள் பொறுமைகாத்து வருவதை பாராட்டினார். (ச-04)

வெளிவந்துள்ளது!

கொழும்பு மாநகரிலும், அதன் ஏனைய மாவட்டங்களிலும் மாணவர் மத்தியில் அமோக வரவேற்பினைப் பெற்று விற்பனையாகிக்கொண்டிருக்கும் தை 2005 (புலமைப் பரிசில் பரீட்சை) ஐந்தாம் தரத்துக்குரியது

புலமைப் பூங்கா

- மாதாந்த சஞ்சிகை
- தாய்மொழி – தமிழ்
- கணிதம்
- சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்
- மாதிரி வினாத்தாள்

சொற்ப பிரதிகளே உள்ளன

விலை 50/=

ஆசிரியர்: மனோ சுரேஷ் B.A(Cey)

கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி

(புலமைப் பரீட்சை வினாத்தாள் ஆசிரியர்) T.P - 01 - 2734325, 0777 660291

யாழ் நகரில் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

வ.மனோகரன்

"மனோவாசம்" இல. 283/4 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

(புகையிரதப் பாதை அருகாமை) (0424)

வீடு வாடகைக்கு விடப்படும்

யாழ். மாநகர சபைக்குட்பட்ட கொட்டடி சீனிவாசகம் வீதியில் 57/19 இலக்க வீடு வாடகைக்கு விடப்படும். அரசாங்க ஊழியர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:
T.P: 077-3164307 (9509)

நாதன்ஸ் சினிமா

யாழ்ப்பாணம்

29.03.2005 முதல்

சரத்குமார், நமிதா, வடிவேல் நடிக்க

ஏய்

குளிரூட்டப்பட்டது

கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

விரைவில் எதிர்பாருங்கள்

ஜெய்ஆகாஷ் நடித்த

குருதேவா

நிறைஞ்சனாஸ்

சங்கானை

விஜய், திரிஷா நடித்த



கில்லி

கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

பதவி வெற்றிடம்

புத்தகம் கட்டுநர் (பைண்டர்ஸ்) – பெண்கள்

யாழ். நகர மையத்திலிருந்து 5 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டும் நேரில் வரவும்.

ஆளணி முகாமையாளர்

வலம்புரி
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்

மனோகரா சினிமா

யாழ்ப்பாணம்

பார்த்தீபன், காவேரி, மாஸ்டர் அஸ்வின் நடித்த

கண்ணாடிப் பூக்கள்



கா.நே: 10.30, 2.30,6.30, 9.30 (நீல்ஸ்)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.